# கம்பர் கவிதைக் கோவை

(இராமாவதார காவியத்தினின்று திரட்டியது)

SITHY VINAYAGAR ... CHUNNAKAM LIBRARY

## 2. அயோத்தியாகாண்டம்

இலங்கை

தபால் தகவல் மந்திரி

கனம். சு. நடேச பிள்ளை, B.A., B.L., F.R.E.S. அவர்களது

முன்னுரையுடன்

பதிப்பாசிரியன்

அ. சே. சுந்தரராஜன், B.A.,

இராமநாதன் கல்லூரி,

சுன்னுகம், இலங்கை.

All Rights Reserved.

விலை ] 1953. [ ரூ. 1-35.

முதலாம் பதிப்பு, ஆகஸ்டு: 1950.

இரண்டாம் பதிப்பு, ஜனவரி: 1953.

சாரதா விலாஸ பிரஸ்,
கரிக்காரத்தெரு,
கும்பகோணம்.

BB.18

# உரிமையுரை.

திருமிகு செந்தமிழ் மரபு
செழித் தோங்கி வருகென
நங்கைமார்க்கும் நம்பிமார்க்கும்
இரு பெருங் கலைக்கழகங்களை
நிறுவிப் பெருவளஞ் செய்த
ஈழமா தேவியின் இன்தவப்
புதல்வராகிய பொன் இராமநாதனார்
அவர்களுக்கு இந்நூலை
நன்னினைவு கூர்ந்து
உரிமையாக்குகின்றேன்.

—பதிப்பாசிரியன்.

## பொருள் அடக்கம்.


| | | பக்கம் | செய்யுள் |
|---|---|---|---|
| | முன்னுரை | iii—iv | |
| | ஆசியுரை | v—vi | |
| | நன்றியுரை | vii—viii | |
| | பாயிரம் | 1— 3 | 10 |
| | **2 அயோத்தியா காண்டம்** | 69—132 | 165—333 |
| 14 | தயரதனிடம் கைகேயி வரங்கொண்டமை | 69 | 165—200 |
| 15 | கைகேயியினிடம் இராமபிரான் விடைகொண்டமை | 79 | 201—208 |
| 16 | கோசலையின் துயரம் | 82 | 209—222 |
| 17 | சுமித்திரை இலக்குவற்குக் கூறிய வாய்மொழி | 87 | 223—224 |
| 18 | பிராட்டி வனஞ்செல எழுதல் | 89 | 225—239 |
| 19 | மூவரும் மருதவைப்பைக் கடந்து செல்லுதல் | 95 | 240—246 |
| 20 | இராமபிரான் குகனோடு தோழமைகொண்டது | 98 | 247—279 |
| 21 | இராமபிரான் பிராட்டிக்குச் சித்திரகூட மலைவளங் காட்டுதல் | 110 | 280—294 |
| 22 | பரதனும் குகனும் சந்தித்தமை | 116 | 295—320 |
| 23 | குகன் அன்னையரைக் காணுதல் | 125 | 321—326 |
| 24 | இராமபிரான் தயரதன் இறந்தது கேட்டுப் புலம்பல் | 129 | 327—333 |


## பிழையும் திருத்தமும்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 75 | 8 | தூயவள் | தீயவள் |
| ,, | 28 | சொன்னான் | சொன்னாள் |
| 91 | 24 | வினங்கும் | விளங்கும் |
| 98 | 7 | படர் பந்துக்கள் | படர் பந்துகள் |
| 120 | 21 | சேர்துது | சேர்த்து |

# முன்னுரை.

கம்ப ராமாயணத்தில் திருப்பாற் கடலைச் சார்த்திக் கூறும் உவமைகள் பல உள. கம்பரின் மனதில் திருப்பாற் கடலைப்பற்றி ஊன்றியிருந்த எண்ணங்கள் அவர் கவிதையில் சமயம் வாய்த்த பொழுதெல்லாம் இடம் பெற்றனபோலும். கம்ப ராமாயணமே திருப்பாற் கடலைப்போன்றது என்று கூறலாம். இக்காப்பியம் விரிந்த செய்யுட்பரப்பை உடையது; கருத்தாழம் பெற்றது; ஓசைப் பெருக்குடையது; கற்பனை மணிக்குவை பொதிந்தது; மூவாத கவியமுதம் தன்னகத்தே கொண்டது. இக்கவியமுதத்தைக் கடைந்தெடுத்துத் துய்க்க வேண்டுமென்ற பேரவா இக்காலத்தில் தமிழகத்தில் பல மக்களிடம் குடிகொண்டிருக்கின்றது. அதற்கேற்ப, கம்ப ராமாயணச் செய்யுட்களிற் சிறந்தவற்றைத் திரட்டிச் சில அறிஞர்கள் வெளியிட்டு வருகின்றனர்.

கம்பர் கவிதைக்கோவை என்ற இந்நூல் இத்தகைய வெளியீடுகளுள் ஒன்றாகும். இது கல்லூரிகளில் தமிழ் கற்கும் மாணவர்களுக்குக் கம்பராமாயணத்தில் சுவையை உண்டாக்கும் முக்கிய நோக்கத்தைக் கொண்டது. தமிழில் ஆர்வமுள்ள ஏனையோர்க்கும் இது பயன்படத்தக்கது. கம்ப ராமாயணத்தின் ஆறு காண்டங்களிலுமுள்ள சிறந்த செய்யுட் பகுதிகள் இந்நூலில் கதைப்போக்குக்கு இயைந்தவாறு கோக்கப்பட்டுக் குறிப்புரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இந்நூல் மூன்று பாகமாக வெளியிடப்படுகின்றது. முதற்பாகத்தில் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம் என்ற மூன்று காண்டங்களினின்று திரட்டிய செய்யுட் பகுதிகளும், இரண்டாம் மூன்றாம் பாகங்களில் கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்ற மற்றைய காண்டங்களினின்று திரட்டிய செய்யுட் பகுதிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முதற் பாகத்தைத் தொடர்ந்து இரண்டாம் மூன்றாம் பாகங்களும் விரைவில் வெளிவரும்.

இந்நூலைப் பதிப்பித்த ஆசிரியர் திரு. சுந்தரராஜன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் இராமநாத வள்ளல் நிறுவிய பரமேசுவரக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி என்ற இரு கல்லூரிகளிலும் உயர்வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்துப் பல ஆண்டுகளாகத் தமிழ்த் தொண்டுபுரிந்து வருகின்றார்கள். இவர்கள் கம்ப ராமாயணத்தில் அதிகம் பயிற்சியுள்ளவர்கள்;

அதன் செய்யுள் நயங்களை நன்குணர்ந்து, பத சாரத்தை நுட்ப மாக உணர்த்த வல்லவர்கள்; பெரியவாச்சான் பிள்ளை முதலிய வைணவச் சான்றோர்களின் வியாக்கியான மரபை அறிந்த வர்கள். இவர்கள் எழுதியுள்ள குறிப்புரை இந்நூலைப் படிப்பவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

இந்நூலில் ஒவ்வொரு செய்யுட் பகுதியின்முன் எழுதப்பட் டிருக்கும் ஆரம்பக் குறிப்புகள் சிறந்த முறையில் அமைந்துள் ளன. இவை அவ்வச் செய்யுட் பகுதியின் சந்தர்ப்பத்தை விளக் குவதோடு செய்யுட்களில் சுவையை உண்டாக்கி, அவற்றின் நயங்களை உய்த்துணரச் செய்கின்றன. மிதிலைக் காட்சிப் படலத் தில் வரும் சூர்யோதய வர்ணனைச் செய்யுட்களைப்பற்றி எழுதப் பட்டிருக்கும் ஆரம்பக் குறிப்பை இதற்கு ஓர் உதாரணமாகக் கூறலாம். இச்செய்யுட்களிற் கூறப்பட்ட உவமைகளில் இரா மாயணச் சரிதத்தின் உட்கிடக்கை தொனிப்பதை இவ்வாரம்பக் குறிப்பு அழகாகப் புலப்படுத்துகின்றது. ஆரம்பக் குறிப்புகள் செவ்விய உரை நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. கம்பரின் கவிதைச் செஞ்சொற்கள் ஆங்காங்கு ஆளப்பட்டிருக்கின்றன.

இப்பதிப்பு மாணவர்களுக்குப் பல வகையிலும் பயன்படக் கூடியதாகும்.

பரமேசுவரக் கல்லூரி,
யாழ்ப்பாணம்,
15—8—1950

சு. நடேச பிள்ளை.

# ஆசியுரை.

## கம்பர் கவிதைக் கோவை.

கற்பகக் கனிபி ழிந்து காதலின் கலையைக் கூட்டி
அற்புதக் கனவு காணும் ஆயிரம் அழகு சேர்த்தே
விற்புய வீர மூட்டி வியன்பெரும் கவிதை செய்தான்
பொற்புறு புலவன் கம்பன் பொன்முடி தமிழுக் கீந்தான்.

ஓமர், தாந்தே, விர்ழில், மில்டன், ஷேக்ஸ்பியர், காளிதாஸன், வியாஸர், வான்மீகி ஆகியோர் உலகமகாகவிகள். இவர்களுடன் வைத்து மதிக்கத்தக்க தமிழ்க்கவியரசன் கம்பனே. மேற்சொன்ன மகாகவிகளின் நயங்களெல்லாம் ஒருங்கே கொண்ட கலைக்கோயில் கம்பராமாயணமே.

கம்பராமாயணம் எல்லையற்ற வாழ்வுச் சித்திரம்; ஆழ்ந்த கலைக்கடல்; ஆயுளெல்லாம் ஆராய்ந்து இன்புறத்தக்க காவியச்சுரங்கம். அதை வடித்தெடுத்துக் கோவையாகத் தந்திருக்கிறார் **ஸ்ரீமான் அ. சே. சுந்தரராஜன்** அவர்கள். அழகிய செஞ்சொல்லால் கம்பராமாயணக் கதை முழுவதையும் இந்நூலிற் காணலாம். **கம்பர் கவிதைக் கோவை** மூன்று பாகங்களாக வெளிவந்துள்ளது. முதற் பாகத்தில் 507 கம்பக் கவிமணிகளுடன் ஆரணிய காண்டம் முடிகின்றது; ஏனைய இரண்டு பகுதிகளில் 727 கம்பச் செய்யுட்களைக் கொண்டு யுத்தகாண்டம் முடிய விமர்சிக்கிறார் ஆசிரியர். செய்யுட்களுக்குத் தெளிவான விளக்கம் உண்டு. செய்யுட்கள் சரியான பாடச் சிறப்புடன் அமைந்துள்ளன. கம்பக் கவிதைகளின் ஒள்ளிய மணிகளை அவற்றுட் காணலாம். இந்நூலைத் தொகுத்த புலவர் இலக்கிய உலகிற்கு நல்ல சேவை செய்திருக்கிறார். இந்த அரிய நூலை எல்லாரும் போற்றிப் பயிலவேண்டும்.

கலையுள மட்டும் செஞ்சொற் கவியுள மட்டும் வெள்ளி
மலையுள மட்டும் எங்கள் வள்ளுவர் உள்ள மட்டும்
தலைசிறந் தோங்குங் கம்பன் தமிழ்சிறந் தோங்கித் தெய்வ
நிலைதரும் இன்பம் போல நிலவுக உலக மெல்லாம்.

—சுத்தானந்த பாரதி.

# நன்றியுரை.

இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம்
எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
ஓங்கு நீழ லிருந்தாலும்
செம்பொன் மேரு அனையபுயத்
திறல்சேர் இராமன் திருக்கதையிற்
கம்ப நாடன் கவிதையிற்போல்
கற்றோர்க்கு இதயங் களியாதே.

இராமாவதார காவியத்திலிருந்து மாணவர் விரும்பிப் படித்து இன்புறத் தக்க சில பல பகுதிகளைத் தெரிவு செய்து ஒரு நூலாக வெளியிடவேண்டும் என்ற ஆர்வம் 1942-ஆம் ஆண்டளவிலேயே எழுந்தது. எனினும் 1949-ஆம் ஆண்டின் முடிவிலேயே செய்யுட்பகுதிகள் தொகுக்கப்பட்டு, குறிப்புரை முதலியனவும் ஒருவாறு எழுதி நிறைவேறின. 1950-ஆம் ஆண்டில் முதல் மூன்று காண்டங்களினின்று திரட்டிய செய்யுட் பகுதிகளைக் கொண்ட முதலாம் பாகம் வெளிவந்தது. கிட்கிந்தா-சுந்தர காண்டச் செய்யுட் பகுதிகளைக் கொண்ட இரண்டாம் பாகமும், யுத்தகாண்டச் செய்யுட் பகுதிகளைக் கொண்ட மூன்றும் பாகமும் 1952-ஆம் ஆண்டில் வெளிவந்தன. முதலாம் பாகத்தின் இரண்டாம் பதிப்பு இப்பொழுது வெளிவருகின்றது.

தெரிவு செய்யப்பட்ட செய்யுட் பகுதிகளுள் பெரும்பாலன மேல்வகுப்பு மாணவர்களுக்குப் படித்துக் காட்டப்பட்ட பின்னரே இந்நூலுள் இடம் பெற்றன. சில பகுதிகளின் ஆரம்பக் குறிப்புகள் அவ்வப் பகுதிகள் ஏற்ற வகுப்புகளுக்குப் படிப்பிக்கப் பட்ட பின்னர் திருத்தி எழுதப்பட்டன. ஒரு சில முக்கியமான செய்யுட்களின் பொருளும் இரண்டொரு வகுப்புகளில் கற்பித்துப் பார்த்து, அதன்பின்னரே செப்பஞ்செய்து எழுதப்பட்டன. ஆரம்பவுரை, குறிப்புரை முதலியனவெல்லாம் மாணவர்பால் இயல்பாயமைந்த சிந்தனைத் திறனும் உய்த்துணர்வும் சிதையாவாறு இன்றியமையாத அளவில் சுருக்கமாக எழுதப் பட்டுள்ளன.

இந்நூலின் கையெழுத்துப் பிரதி முழுவதையும் பார்வையிட்டு, அவ்வப் போது வேண்டுந் திருத்தங்கள் கூறி, ஐயங்களையெல்லாந் தீர்த்து, எல்லா வழியிலும் இம் முயற்சிக்கு ஊக்கமளித்து, இந்நூலுக்கு அரிய முன்னுரை

யையும் பெருந்தகைமையோடு எழுதியளித்த தபால், தகவல் மந்திரி, கனம். சு. நடேச பிள்ளை, B. A., B. L., F. R. E. S., அவர்களுக்கு யான் பல்லாற்றானும் கடப்பாடுடையேன். அப்பேரறிஞர் செய்துள்ள உதவிகளுக்கெல்லாம் எனது ஆழ்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

செய்யுட்பகுதிகளையெல்லாம் ஒருவாறு தொகுத்து, குறிப்புரை முதலிய வற்றை எழுத ஆரம்பித்த காலத்திலேயே, எனது நண்பர் திரு. வி. செல்வ நாயகம், M. A., அவர்கள் கையெழுத்துப் பிரதியைப் படித்துப் பார்த்து, குறிப்புரை முதலியன அமையவேண்டிய பண்புகளைப் பற்றிச் சில அரிய ஆலோசனைகள் கூறினார்கள். அருங்கலைச் செல்வராகிய அவர் கூறிய கருத்துக் களை ஆதாரமாகக் கொண்டே ஆரம்பவுரை, குறிப்புரை முதலியவற்றை எழுதலானேன். மேலும் இந்நூலையிட்டு அன்னார் செய்துள்ள உதவிகள் மிகப்பெரியன. அவற்றிற்கெல்லாம் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கையெழுத்துப் பிரதியை முழுவதும் கேட்டு ஆராய்ந்து இந்நூல் அச்சாகி வெளிவருவதற்கான உதவிகளை ஒல்லும் வகை பேரன்புடன் புரிந்த பிரமஸ்ரீ பி. ஸ்ரீனிவாஸய்யர் அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியை வணக்கத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

இந்நூலிற்கு அரும்பெறற் பேருக, ஆசியுரை வழங்கிய கவியோகி, ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்களுக்கு எனது பெரிய நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இந்நூலிற்குப் பேரன்புடன் பாராட்டுரைகள் வரைந்து அனுப்பிய அன்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

இந்நூலின் மூன்று பாகங்களையும் அழகுற அச்சிட்டுதவிய சாரதா விலாஸ அச்சகத்தாருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம், 26—1—1953.

பதிப்பாசிரியன்.

# 2. அயோத்தியா காண்டம்

## 14. தயரதனிடம் கைகேயி வரங்கொண்டமை.

---

கூனிக்கு வாக்களித்தபடியே தயரதனிடம் இருவரங்களையும் பெற்ற வரலாறு இப்பகுதியிற் கூறப்படுகின்றது.

கோசிக முனிவன் வந்த பொழுது முன்னமே வாக்களித்து, படாத துயருழந்தது போலவே தயரதன் அவசரப்பட்டு, கைகேயிக்கு வரமளிப்பதாக உறுதிகூறி, முன்னையினும் பன்மடங்கு துயருழந்தான். அவன் அடைந்த துயரம் படிப்படியே வளர்ந்து உச்ச நிலையை யடைந்த வரலாற்றை ஆசிரியர் கண்கூடாகக் காட்டுகின்றார். மைந்தனலாது உயிர் வேறிலாத மன்னன், தீயவை யாவையினுஞ் சிறந்த தீயவளாகிய உரங்கொள் மனத்தவள், சீதை கேள்வன் போய் வனமாள்வது என்று கூறக் கேட்டதும் ஆவி பதைப்ப அலக்கண் எய்தினன். கம்பநெடுங்களி யானையன்ன மன்னன் கைகேயியின் வரம் என்னும் பாசத்தாற் கட்டுண்டு அறிவு கலங்கித் தத்தளித்தான். அங்ஙனந் தவித்தவன்மீது அம்பன்ன கண்ணாள் பல சொல்லம்புகளை ஒன்றன்பின் ஒன்றாகத் தொடுத்து அவன் துயரத்தைப் பெருக்கினாள். முதலில் அவள் குணம் மாறுபட்டதன் காரணத்தை அறிய முயன்றான்; அது பலிக்கவில்லை. பின்பு அவள் காலில் விழுந்து, "மண்ணே கொள் நீ; மற்றைய தொன்றும் மற" என்று இரந்தான். அவள் சிறிதும் தடுமாற்றமின்றி முன்பு சொன்னது போலவே, "முன்னே தந்தாய் இவ்வரம்; நல்காய் முனிவாயேல் என்னே மன்னா யாருளர் வாய்மைக்கு இனி?" என்றாள். மறுபடியும் கெஞ்சி, "என் உயிர் நின் அபயம்" என்னலும், அவள், "தந்த வரத்தைத் தவிர்கென்றல் உரந்தானல்லால் நல்லறமாமோ உரை", என்று மற்றொரு அம்பு தொடுத்தாள். அது கேட்ட மன்னன் உயிர் உண்டோ இல்லையோ என்னும்படி ஆயினன். துன்புற்றுப் பலவாறு கூறிய மன்னன் பூமியில் விழுந்து புரளும் பொழுது எரிந்து ஆறாத கனல்போல்பவள், "முன்பு நுங்குல

முதல்வனொருவன் வாய்மையின் பொருட்டு, தன் அருமேனியை அரிந்தான்; நீயோ வாய்மை வளர்ப்பான் வரம் நல்கிவிட்டு வருந்துகின்றாய்; அதனால் வரும் பயன் யாது? நீ இவ்வரங் கொடாவிடில் இன்றே யான் உயிர் மாய்வேன்" என்றுரைத்தாள். மன்னவனும் இவள் இறந்தேவிடுவாள் என்று அஞ்சி, "ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம்" என்று கூறித் தேறானுகிச் செயல் மறந்தான். காரியம் கைகூடிய ஆனந்தம் மேலிட்ட கைகேயியும் துயில்வுற்றாள்.

[தெ. ப:—கைகேயி சூழ்வினைப் படலம்: 9—38; 40—45.]

1 வரங்கொள இத்துணை மம்மர் அல்லல் எய்தி
இரங்கிட வேண்டுவ தில்லை ஈவன் என்பாற்
பரங்கெட இப்பொழு தேப கர்ந்தி டென்றான்
உரங்கொள் மனத்தவள் வஞ்சம் ஓர்கி லாதான். 1

2 ஏய வரங்கள் இரண்டின் ஒன்றி னாலென்
சேயுல காள்வது சீதை கேள்வன் ஒன்றால்
போய்வன மாள்வது எனப்பு கன்று நின்றாள்
தீயவை யாவை யினுஞ்சி றந்த தீயாள். 2

3 நாக மெனுங்கொடி யாள்தன் நாவின் வந்த
சோக விடந்தொட ரத்து ணுக்க மெய்நா
ஆக மடங்கலும் வெந்த ழிந்த ராவின்
வேக மடங்கிய வேழ மென்ன வீழ்ந்தான். 3

---

1. மம்மர்—தடுமாற்றம். அல்லல்—வருத்தம். இரங்கிடல்—மனந்தளர்தல். பரம்—பாரம். உரங்கொள் மனத்தவள் வஞ்சம்—கூனி ஏவலால் வன்மையான மனத்தைக் கொண்டவள் காட்ட நின்ற வஞ்சனை: இப்பகுதியில் வெளிப்படுங் குணம் தொகுத்துரைக்கப்பட்டது. ஓர்கிலான்—அறியாதானாய்.

2. ஏய—சொல்லிய. சேய்—பரதன். சீதை அரசமாதேவி யாதலைப் பொறாது, 'சீதை கேள்வன்' என்றாள். வனம் ஆள்வது; வனம் மாள்வது. என்று தொனிக்கும்படி சொன்னாள் கோப மிகுதியினாலே. ஈற்றடி அவள் குணத்தின் தன்மையை உருப்படுத்திக் காட்டுகின்றது.

3. நாகம்—நல்லபாம்பு. நாகமெனுங் கொடியாள்—சிறந்த தீயாள் என்பதன் விவரணம். சோகம்—துன்பம். சோகத்துக்குக் காரணமாகிய விடம். தொடர—பற்ற. ஆகம் அடங்கலும்—உடல் முழுவதும் அராவின்—பாம்பினால். அரவு அழித்த யானை. கார்க்கோடகன் பல்லின் விடத்தால் நளனது தோள் குறைந்தது: இவளது சொல்லின் விடத்தால் உடல் முழுதும் வெந்தது.

4 பூதல முற்றத னிற்பு ரண்ட மன்னன்
மாதுய ரத்தினை யாவர் சொல்ல வல்லார்
வேதனை முற்றிட வெந்து வெந்து கொல்லன்
ஊதுலை யிற்கன லென்ன வெய்து யிர்த்தான். 4

5 உலர்ந்தது நாவுயி ரோட லுற்ற துள்ளம்
புலர்ந்தது கண்கள் பொடித்த பொங்கு சோரி
சலந்தலை மிக்கது தக்க தென்கொ லென்றென்று
அலந்தலை யுற்ற அரும்பு லன்கள் ஐந்தும். 5

6 மேவி நிலத்தி லிருக்கும் நிற்கும் வீழும்
ஓவியம் ஒப்ப உயிர்ப்ப டங்கி ஓயும்
பாவியை யுற்றெதிர் பற்றி எற்ற எண்ணும்
ஆவி பதைப்ப அலக்க ணெய்தி நின்றான். 6

7 பெண்ணென வுட்கும் பெரும்ப ழிக்கு நாணும்
உண்ணிறை வெப்பொடு உயிர்த்து யிர்த்து லாவும்
கண்ணில னொப்ப அயர்க்கும் வன்கை வேல்வெம்
புண்ணுழை கிற்க உழைக்கும் ஆனை போல்வான். 7

8 கம்ப நெடுங்களி யானை யன்ன மன்னன்
வெம்பி விழுந்தயர் விம்மல் கண்டு வெய்துற்று

---

4. மாதுயரம்—பெருந்துயரம்: ஏழாஞ் செய்யுள் முடியக் கூறப்படும் பொருள் இதுவே. வேதனை முற்றிட—துன்பம் முதிர்ச்சியடைய. வெந்து வெந்து—ஒரு முறை வெந்த சரீரம் மறுபடியும் வெந்து; 'வேவு ஆரா'விடம்: இன்றேல் மிகவும் வெதும்பி. வெய்துயிர்த்தான்—பெருமூச்சு விட்டான்.

5. நா உலர்ந்தது. உயிர் ஓடலுற்றது—முன்பு ஊசலாடிய ஆருயிர் இப்பொழுது விரைந்து ஓடிப்போகத் தொடங்கியது. (பால: 51.) புலர்ந்தது—வாடிற்று. கண்கள் மிகுந்த இரத்தத்தைச் சிந்தின. சலம்—மிகுந்த சினம்: நடுக்கமும் ஆம். தக்கது—இப்போது செய்யத்தக்கது. அலந்தலை—கலக்கம்.

6. உயிர்ப்பு அடங்கி ஓவியம் ஒப்ப ஓயும். ஓயும்—செயலற்றுப் போவான். பாவியை—கொடியவளான கைகேயியை. எதிர் உற்று. எற்ற—மோத. அலக்கண்—துன்பம்.

7. உட்கும்—அஞ்சும். பெண்பாலாகிய கைகேயியைப் பற்றி எற்றுதற்கு அஞ்சுவான். உள் நிறை வெப்பு—உள்ளே நிறைந்த தாபத்துடன். அயர்க்கும்—சோரும். நுழைகிற்க—நுழைய. உழைக்கும்—வருந்தும்.

8. கம்ப யானை—கம்பத்திற் கட்டிய யானை. களி—மதம். இராமன் முடிசூடும் களிப்பு மிக்க அரசன் கைகேயின் வரம் என்னுங் கயிற்றாற்

உம்பர் நடுங்கினர் ஊழி பேர்வ தொத்தது
அம்பன கண்ணவள் உள்ளம் அன்ன தேயால். 8

9 அஞ்சலள் ஐயன தல்லல் கண்டும் உள்ளம்
நஞ்சிலள் நாணிலள் என்ன நாண மாமால்
வஞ்சனை பண்டு மடந்தை வேட மென்றே
தஞ்சென மாதரை உள்ள லார்கள் தக்கோர். 9

10 இந்நிலை நின்றவள் தன்னை எய்த நோக்கி
நெய்ந்நிலை வேலவன் நீதி கைத்த துண்டோ
பொய்ந்நிலை யோர்கள் புணர்த்த வஞ்ச முண்டோ
அந்நிலை சொல்லென தானை உண்மை என்ருன். 10

11 திசைத்தது மில்லை எனக்கு வந்து தீயோர்
இசைத்தது மில்லை முன்ஈந்த இவ்வ ரங்கள்
குசைப்பரி யோய்தரின் இன்று கொள்வென் அன்றேல்
வசைத்திறம் நின்வயின் வைத்து மாள்வன் என்ருள். 11

---

கட்டுண்டு தவித்தமை பற்றி', கம்ப நெடுங்களி யானை' என்ருர். வெம்பி—மனம் வெதும்பி. விம்மல்—துன்பம். ஊழிக்காலம் வந்தது போன்றது. அம் மதயானை மீது அம்பெய்தால் ஒப்ப இனி வருத்துகின்றதைக் கருதி, 'அம்பன கண்ணவள்' என்று கூறினர். அம்பு அன—அம்பைப் போன்ற. அன்னதே—அப்படியே இருந்தது; சிறிதும் இரங்கவில்லை; அஞ்சவுமில்லை. 'வெம்பி விழுந்தயர் விம்மல்' என்றும் பாடம்.

9. உள்ளம் அன்னதே என்பதை விவரிப்பன முதலிரண்டு அடிகள். அஞ்சலள்—களியானை யன்னவன் என்பதற்கும் அஞ்சினுளல்லள். ஐயன்—தலைவன். நஞ்சிலள்—நைந்திலள்: மனம் இளகவில்லை என்று கூறவே ஒருவருக்கு நாணம் உண்டாகும். வஞ்சனையே பெண் வடிவு. என்று—என்று கருதி. தஞ்சு—தஞ்சம்; கதி; பற்றுக்கோடு.

10. எய்த நோக்கி—இதயம்வரை உருவும்படி நோக்கி. நெய்ந்நிலை வேல்—நிணம் பூசிய வேல். திகைத்தல்—மயக்கங் கொள்ளுதல். அறிவு மயங்கியதுண்டோ? பொய்ந்நிலையோர்—வஞ்சகர். அந்நிலை—அந்தத் தன்மையை. அந்நிலையை உள்ளபடி சொல் என்ருன்.

11. அம்பன்ன கண்ணவளாதலால் அரசன் கேட்ட ஒவ்வொரு விஞவிற்கும், 'கம்ப நெடுங்களி யானை மீது' அம்பெய்தாற் போன்று மறுமொழி கூறுகின்ருள். திசைத்தது—திகைத்தது. குசை—கடிவாளம். வசைத்திறம்—அபவாதம்.

12 இந்த நெடுஞ்சொலவ் வேழை கூற முன்னே
வெந்த கொடும்புணில் வேல்நுழைந்த தொப்பச்
சிந்தை திரிந்து திகைத்த யர்ந்து வீழ்ந்தான்
மைந்த னலாதுயிர் வேறி லாத மன்னன். 12

13 ஆகொடி யாயெனும் ஆவி காலும் அந்தோ
ஓகொடி தேயற மென்னும் உண்மை ஒன்றுந்
சாகவெ னுவெழும் மெய்த ளாடி வீழும்
மாகமும் நாகமும் மண்ணும் வென்ற வாளான். 13

14 நாரிய ரில்லையிஞ் ஞால மெங்த மென்னக்
கூரிய வாள்கொடு கொன்று நீக்கி யானும்
பூரியர் எண்ணிடை வீழ்வன் என்று பொங்கும்
வீரியர் வீரம் விழுங்கி நின்ற வேலான். 14

15 கையொடு கையைப் புடைக்கும் வாய்க டிக்கும்
மெய்யுரை குற்ற மெனப்பு ழுங்கி வீம்மும்
நெய்யெரி யுற்றென நெஞ்ச ழிந்து சோரும்
வையக முற்றும் நடந்த வாய்மை மன்னன். 15

16 ஒறுப்பினும் அந்தரம் உண்மை ஒன்றும் ஓவா
இறுப்பினும் அந்தரம் என்ற வாய்மை மன்னன்

---

12. ஏழை—அரசின்மேல் வைத்த ஆசையினால் கணவனையே இழக்கும் அறிவு கேடி. வெந்த கொடும்புண்—முன் மூன்றுஞ் செய்யுளிற் கூறிய விடம் பரவி வெந்த கொடும் புண் ஆயிற்று: இப்பொழுது கூறிய நெடுஞ் சொல் அதில் நுழைந்த வேல். சிந்தை திரிந்தது—மனம் தடுமாறிற்று. அயர்ந்து—அறிவு சோர்ந்து.

13. ஆ—இரக்கப் பொருள். ஆவி காலும்—பெருமூச்சு விடுவான். ஒன்றும்—முழுவதும். மாகம்—மேலுலகம். நாகம்—கீழுலகம்.

14. நாரியர்—பெண்கள். பூரியர்—கீழ்மக்கள். எண்ணிடை—எண்ணிக்கையில். கீழ்மக்களில் ஒருவனுவேன். பொங்கும்—கோபிப்பான். வீரியர்—வீரம் நிறைந்தவர்.

15. மெய்யுரை குற்றம்—மெய் பேசுதல் தீங்கு தருவது. எரி உற்றென—தீயினை அடைந்தாற் போல. நெய்யானது நெருப்பிலே பட்டால் எப்படி எரிந்து ஒன்றுமில்லாமற் போகுமோ அப்படி நெஞ்சு அழிந்துவிட்டது. நடந்த—பரவிய.

16. ஒறுப்பினும் அந்தரம்—'பெண்ணென உற்ற பெரும் பழிக்கு நாணுது' இவளைத் தண்டித்தாலும் வருவது துன்பம்: முடிபுனைவு நிகழாது.

மறுப்பினும் இந்நிலை போகி லாளை வாளால்
இறுப்பினும் ஆவது இரப்ப தென்றெ ழுந்தான். 16

வேறு

17 கோன்மேற் கொண்டுங் குற்ற மகற்றக் குறிகொண்டார்
போன்மே லுற்ற துண்டெனின் நன்றும் பொறையென்னுக்
கான்மேல் வீழ்ந்தான் கந்துகொல் யானைக் கழன் மன்னர்
மேன்மேல் வந்து முந்தி வணங்கி மிடைதாளான். 17

18 கொள்ளான் நின்சேய் இவ்வரசு அன்னன் கொண்டாலும்
நள்ளா திந்த நானிலம் ஞாலந் தனிலென்றும்
உள்ளா ரெல்லாம் ஓத உவக்கும் புகழ் கொள்ளாய்
எள்ளா நிற்கும் வன்பழி கொண்டென் பயனென்றான். 18

19 வானோர் கொள்ளார் மண்ணவர் உய்யார் இனிமற்றென்
ஏனோர் செய்கை யாரொடு நீஇவ் வரசாள்வாய்
யானே சொல்லக் கொள்ள இசைந்தான் முறையாலே
தானே நல்கும் உன்மக னுக்குத் தரைஎன்றான். 19

20 கண்ணே வேண்டு மென்னினும் ஈயக் கடவேனென்
உண்ணே ராவி வேண்டினு மின்றே உனதன்றே

---

வாய்மை ஒன்றையே பாதுகாவாநின்று கேட்ட வரத்தை அளிப்பினும் அதே துன்பம். என்று அ வாய்மை மன்னன். என்று—ஒரு படி நினைந்து; பிறகு இவ்விரண்டிலும் பார்க்க, இரப்பது நலம் என்ற முடிவிற்கு வந்தான். வரங் கொடுக்க மறுத்தாலும் பிடித்த பிடிவாத நிலையினின்றும் சிறிதும் விலகாத இவளை வாளால் வெட்டுதலினும் இரப்பது நன்மை தருவது என்று எண்ணி எழுந்தான்.

17. கோல்—செங்கோல்; நீதி தவறாத ஆட்சி. செங்கோலாட்சியை மேற்கொண்டும் தம்மீதுள்ள குற்றத்தை நீக்குதலைக் குறிக்கோளாகக் கொண்ட அரசரைப் போலப் பொறை நன்று என்று வீழ்ந்தான். மேல் உற்றது உண்டு எனின் நன்று ஆம் பொறை என்னு—இனி வரும் நன்மை உண்டென்றால் ஒறுத்தலினும் பொறுத்தலே நன்று என எண்ணி. கந்து—கட்டுத்தறி. கொல்—முறிக்கின்ற. மிடை—நெருங்குகின்ற.

18. நள்ளாது—விரும்பாது.

19. ஏனோர்—பாதாளத்தார்.

20. ஈயக்கடவேன்-கொடுப்பேன். உள் நேர் ஆவி-உள்ளே பொருந்திய உயிர். பெண்ணே—இரக்கமுடையவளே! வண்மைக் கேகயன் மானே—

பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல்
மண்ணே கொள்நீ மற்றைய தொன்றும் மறவென்றான். 20

21 வாய்தந் தேனென் றேன்இனி யானோ அதுமாற்றேன்
நோய்தந் தென்னை நோவன செய்து நுவலாதே
தாய்தந் தென்னத் தன்னை இரந்தால் தழல்வெங்கண்
பேய்தந் தீயும் நீஇது தந்தாற் பிழையாமோ. 21

22 இன்னே இன்ன பன்னி இரந்தான் இகல்வேந்தன்
தன்னே ரில்லாத் தூயவள் உள்ளந் தடுமாறாள்
முன்னே தந்தாய் இவ்வரம் நல்காய் முனிவாயேல்
என்னே மன்னா யாருளர் வாய்மைக் கினியென்றாள். 22

23 அச்சொற் கேளா ஆவி புழுங்கா அயர்கின்றான்
பொய்ச்சொற் கேளா வாய்மொழி மன்னன் பொறைகூற
நச்சுத் தீயே பெண்ணுரு வன்றோ எனநாணா
முச்சற் றார்போற் பின்னு மிருந்தே மொழிகின்றான். 23

24 நின்மக னாள்வான் நீயினி தாள்வாய் நிலமெல்லாம்
உன்வய மாமே ஆளுதி தந்தேன் உரைகுன்றேன்
என்மகன் என்கண் என்னுயிர் எல்லா உயிர்கட்கும்
நன்மகன் இந்த நாடிற வாமை நயவென்றான். 24

---

வள்ளன்மைக்குப் பெயர்போன கேகயன் குலத்தில் தோன்றிய நீ யான் சொல்வதை மறுக்கலாமோ? மற்றையதொன்றும்—இராமன் காடுசெல்வதைத் தன் வாயினாற் சொல்லக் கூசினான்.

21. வாய் தந்தேன் என்றேன்—வாக்களித்தேன் என்று சொல்லிவிட்டேன். நோய்—வருத்தம். நுவலாதே—சொல்லாதே. தாய் தந்தென்ன—தாயே கொடுத்தாற்போல. தந்தீயும்—தரும். இது—'மற்றையது ஒன்று'.

22. இன்னே—இங்ஙனமே. இன்ன—இத்தகைய இரப்பு மொழிகளை. பன்னி—பலகாற் சொல்லி. தடுமாறாள்—தான் கூறும் கூற்றில் எவ்வித நடுக்கமுங் கொள்ளாதவளாகி; தான் சொல்வதை அழுத்தந் திருத்தமாகச் சொன்னான். நல்காய்—நல்காமல். முனிவாயேல்-வெறுப்பாயேல். வாய்மைக்கு—வாய்மையை நிலை நாட்டுவதற்கு.

23. புழுங்கா—வெதும்பி. அயர்கின்றான்—சோர்கின்றவனாகி. அவள் கூறியனபோன்ற வஞ்சகம் நிறைந்த சொற்களைப் பிறர் கூறக் கேட்டறியாத அரசன். முச்சு—மூச்சு: விகாரம்.

24. நின் மகன் அரசாள நீ அதைப் பார்த்து, ஆள்வது போன்று மகிழ்வாய். ஆளுதி—நெடுங்காலம் ஆள்வாயாக. நாடு இறவாமை நய—நாட்டை விட்டு நீங்காமையை மட்டுமாவது விரும்புவாயாக.

25 மெய்யே என்தன் வேரற நூறும் வினைநோக்கி
நையா நின்றேன் நாவு முலர்ந்தேன் நளினம்போற்
கையான் இன்றென் கண்ணெதிர் நின்றுங் கழிவானேல்
உய்யேன் நங்காய் உன்னப யம்மென் னுயிரென்றான். 25

26 இரந்தான் சொல்லும் இன்னுரை கேளாள் முனிவெஞ்சாள்
மரந்தா னன்ன நெஞ்சினள் நாணாள் வசைபாராள்.
சரந்தாழ் வில்லாய் தந்த வரத்தைத் தவிர்கென்றல்
உரந்தா னல்லால் நல்லற மாமோ உரையென்றாள், 26

27 கொடியாள் இன்ன கூறினள் கூறக் குலவேந்தன்
முடிசூ டாமல் வெம்பரல் மொய்கா னிடைமெய்யே
நெடியோன் நீங்க நீங்குமென் னாவி இனியென்னா
இடியே றுண்ட மால்வரை போன்மண் ணிடைவீழ்ந்தான். 27

28 வீழ்ந்தான் வீழா வெந்துய ரத்தின் கடல்வெள்ளத்து
ஆழ்ந்தான் ஆழா அக்கட லுக்கோர் கரைகாணான்
சூழ்ந்தாள் துன்பம் அக்கொடி யாள்சொற் கொடுநெஞ்சம்
போழ்ந்தாள் உள்ளப் புன்மையை நோக்கிப் புலர்கின்றான். 28

29 ஒன்றா நின்ற ஆருயி ரோடும் உயர்கேள்வர்
பொன்றா முன்னம் பொன்றின ரென்னும் புகழல்லால்
இன்றோர் காறும் எல்வளை யார்தம் இறையோரைக்
கொன்றா ரில்லை கொல்லுதி யோநீ கொடியாளே. 29

---

25. வாய்மையே என்னை அடியோடு கெடுக்கும் வினையாக வந்ததை நோக்கி வாடுகின்றேன். நளினம் போல் கையான்—தாமரை மலர் போன்ற கையையுடைய இராமன். உய்யேன்—உயிர்தப்பேன்.

26. முனிவு எஞ்சாள்—கோபம் தணியாள். சரத்தோடு வளையும் வில்லை யுடையவனே! உரம்—மனவலிமை; கல் நெஞ்சு.

27. வெம் பரல்—கொடிய பரல் கற்கள். மொய் கான்—நெருங்கிய காடு. நெடியோன்—இராமன். மால்வரை—பெரிய மலை.

28. துன்பம் சூழ்ந்தாள்—இத்துன்பத்தை நினைந்து செய்தவள். சொல் கொடியாள்—சொல்லினாற் கொடுமை இழைப்பவள். போழ்தல்—பிளத்தல். உள்ளப் புன்மை—மனத்தின் அற்பத்தன்மை.

29. உடலோடு ஒன்றுபட்ட அரிய உயிர். உயர் கேள்வர்—யாவரினும் மேலான உறவினராகிய கணவர். இன்றோர் காறும்: ஓர் இடைச்சொல். எல்—ஒளி.

30 ஏவம் பாராய் இன்முறை நோக்காய் அறமெண்ணாய்
ஆவென் பாயோ அல்லை மனத்தால் அருள்கொன்றாய்
நாவம் பாலென் னாருயிர் உண்டாய் இனிஞாலம்
பாவம் பாராது இன்னுயிர் கொள்ளப் போகின்றாய். 30

31 மண்ணாள் கின்றா ராகி வலத்தால் மதியால்வைத்து
எண்ணா நின்றா ரியாரையும் எல்லா இகலாலும்
விண்ணோர் காறும் வென்ற எனக்கென் மனைவாழும்
பெண்ணால் வந்தது அந்தரம் என்னப் பெறுவேனோ. 31

32 என்றென் றுன்னும் பன்னி இரங்கும் இடர்தோயும்
ஒன்றொன் றொவ்வா இன்ன லுழக்கும் உயிருண்டோ
இன்றின் றென்னும் வண்ண மயங்கும் இடைகின்றான்
குன்றொன் றொன்றோ டொன்றிய தென்னக் குவிதோளான். 32

33 ஆழிப் பொற்றேர் மன்னவன் இவ்வா றயர்வெய்திப்
பூழிப் பொற்றாள் முற்று மடங்கப் புரள்போழ்தில்
ஊழிற் பெற்றாய் என்றுரை யன்றேல் உயிர்மாய்வன்
பாழிப் பொற்றாள் மன்னவ என்றாள் பசையற்றாள். 33

---

30. ஏவம்—குற்றம். இல் முறை—குடிப்பிறப்பிற்குரிய முறை. ஆ என்பாயோ—அந்தோ என்று மனம் இரங்குவாயோ, அல்லை. நாவாகிய அம்பினாலே என் ஆருயிரை உண்டாய்; இனி பாவம் என்பதையும் பாராது உலகிலுள்ள உயிரையெல்லாம் கொலை செய்யப்போகின்றாய்.

31. மதி—அறிவு. எண்ணா நின்றார்—எண்ணப்பட்ட அரசர்; அதாவது புகழ் பெற்றவர். எல்லா இகலாலும்—எல்லா வலியாலும். அந்தரம்—முடிவு.

32. பலதடவை இங்ஙனம் சிந்திப்பான். பன்னி—சொல்லி. இடர் தோயும்—துன்பக்கடலுள் முழுகுவான். இன்னல் உழக்கும்—துன்பமாகிய சேற்றில் அகப்பட்டு வெளியே வரவியலாது வருந்துவான். மயங்கும்—மூர்ச்சிப்பான். இடியும்—நெஞ்சுடைவான். உயிர் உண்டோ இல்லையோ என்று பிறர் கூறும் விதம். இடைகின்றான்—தளர்கின்றான். இரண்டு பொற்குன்று ஒன்றுசேர நின்றது போன்ற தோள்களையுடைய மன்னன்.

33. பூழி அடங்க—புழுதி நிறையும்படி. ஊழில் பெற்றாய் என்று உரை—வரம் இரண்டினையும் முறையாக நான் பெற்றேன் என்று உன் வாயினாற் சொல்லுதி. 'ஊழிற் பொய்த்தால் என்னுரை இன்றே உயிர் மாய்வென்' என்ற பாடத்திற்கு, 'நீ முறைமையினின்றும் வழுவிப் பொய்த்தால், யான் கூறும் ஒரே சொல், "இன்றே உயிர் மாய்வேன்" என்பது' என்று பொருள் கொள்க. பாழி—வலிமை. பசை—அன்பு.

34 அரிந்தான் முன்னோர் மன்னவ னன்றே அருமேனி
வரிந்தார் வில்லாய் வாய்மை வளர்ப்பான் வரம்நல்கிப்
பரிந்தா லென்னும் என்றனள் பாயுங் கனலேபோல்
எரிந்தா றாதே இன்னுயி ருண்ணும் எரியன்னாள். 34

35 வீந்தா ளேயிவ் வெய்யவ ளென்னா மிடல்வேந்தன்
ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம் என்சேய் வனமாள
மாய்ந்தே நான்போய் வானுல காள்வென் வசைவெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின்மக னோடும் நெடிதென்றான். 35

36 கூறா முன்னங் கூறு படுக்குங் கொலைவாளின்
ஏறா மென்னும் வன்துயர் ஆகத் திடைமூழ்கத்
தேறா னாகிச் செய்கை மறந்தான் செயல்முற்றி
ஊறா நின்ற சிந்தையி னாளுந் துயில்வுற்றாள். 36

---

34. ஓர் மன்னவன்-சிபி. வரிந்து கட்டிய வில்லையுடையவனே! முன் ஓர் மன்னவன் அருமேனி அரிந்தானன்றே—முன்பு உன் குல முன்னோன் ஒருவன் தன் அரிய சரீரத்தை அறுத்துக்கொடுத்தானல்லனோ? வாய்மை வளர்ப்பான்-அதுவும் தன் வாய்மையைப் பேணும் பொருட்டு. வாய்மை வளர்ப்பவன் மரபில் தோன்றிய நீ இப்படி வரங்கொடுத்துப் பின்பு வருந்தலாமோ? பரிந்தால் என் ஆம்—இப்படி வருந்தினால் வரும் பயன் யாது? நீ மேற்கொண்ட வாய்மை யாதாய் முடியும்? எரிந்து ஆறாதே—பொருளை ஒரு முறை எரித்த பின்பு வெம்மை அடங்காமல் எரித்த சாம்பலையே மறுபடியும் எரிக்கும்படி ஆறாமல். 'வேவு ஆராவேட்கை நோய்' (திருவாய் மொழி: 2, 1:10.) என்பதில் 'வேவு ஆரா' என்பது போன்றது.

35. இக்கொடியவள் இறப்பது நிச்சயம் என்றுட்கொண்டு. மிடல்—வலிமை. வனம் ஆள. வனம் மாள: தொனி (அயோத்தி: 2.) வசை வெள்ளம்—பழியாகிய கடல் வெள்ளத்திலே.

36. கூறாமுன்னம் செய்கை மறந்தான் என்று முடிக்க. கொலைத் தொழிலிற் சிறந்த வாள் என்று கூறத்தகும் துயர்: நினைத்தவுடனே உயிரைப் பிளப்பது போன்று வருத்தும் துயரம். (யுத்த: 332.) ஆகத்திடை மூழ்க—மனத்தில் அழுத்துதலால். தேறானாகி—தெளியாதவனாகி; அறிவு மிகக் கலங்கி. செய்கை மறந்தான்—செயலற்றுக்கிடந்தான். ஊறாநின்ற சிந்தையினாள்—களிப்பு மிகுதிப்பட்ட மனத்தினாள். துயில்வுற்றாள்—நித்திரை செய்யலானாள்.

## 15. கைகேயியினிடம் இராமபிரான் விடைகொண்டமை.

சுமந்திரன் அழைப்ப வந்த இராமபிரானைக் கைகேயி இடைமறித்து, தயரதன் கட்டளை இன்னதென்று தெரிவிக்க, அவன் அவளிடம் விடைபெற்ற வரலாறு இப்பாடத்திற் கூறப்படுகின்றது.

இப்பகுதியில் இராமபிரானது யாரும் செப்பருங்குணம் எடுத்துக் காட்டப்படுகிறது. இரும்பினால் இயைந்த நெஞ்சிற் கொன்றுழல் கூற்றமன்ன கைகேயியைக் கண்டதும் அந்திவந் தடைந்த தாயைக்கண்ட ஆன்கன்று போன்று, அன்பு சுரந்த இராமபிரான் அவளைத் தெய்வநிலையில் வைத்து வணங்கி நின்றான். தயரதனிடம் பேசும்பொழுது சிறிதும் உள்ளந் தடுமாறாதவள் இராமபிரானது பணிவினாலும் தாமரை யன்ன முகப் பொலிவினாலும் சிறிது கவரப்பட்டு, "யான் உரைக்கற்பாலது உனக்கு உந்தை உரைக்க நின்றது ஓருரை உண்டு" என்று கூறி, அவனது உடன்பாட்டை அவாவி நிற்ப, மைந்தனும் தயக்கமின்றி, "தந்தையும் தாயும் நீரே: தலைநின்றேன்: பணிமின்" என்றான். உடனே அவள் விவரத்தைத் தெரிவித்தாள். தான் அரசினை இழந்ததற்கோ அன்றிக் காடுசெல்ல நேர்ந்ததற்கோ சிறிதும் வருந்திலன்: தாமரை போன்ற முகம் அதைக் கேட்டதும் அப்பொழுதலர்ந்த செந்தாமரையை வென்றது. அரசியற் பாரம் நீங்கப் பெற்ற குதுகலிப்பு உடல் முழுவதும் பரந்தது. தம்பிபெற்ற அரசியலைத் தான் பெற்றது போல மகிழ்ந்து, மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன் என்று விடையுங் கொண்டான். மறுபடியும் அன்னையை வணங்கினான். தந்தையைத் திசை நோக்கித் தொழுதான். பெரும்பாரம் நீங்க, முன்பு குன்றனைய தோள் இப்பொழுது குன்றினும் உயர்ந்தது. இந்நிலையில் கௌசலையின் மாளிகையை நோக்கிச் செல்லலானான்.

[தெ. ப:—கைகேயி சூழ்வினைப் படலம்: 103—110.]

37 ஆயன நிகழும் வேலை அண்ணலும் அயர்ந்து தேருத்
தூயவன் இருந்த சூழல் துருவினன் வருதல் நோக்கி
நாயகன் உரையான் வாயால் நானிது பகர்வென் என்னுத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள்
வந்தாள். 1

38 வந்தவள் தன்னைச் சென்னி மண்ணுற வணங்கி வாசச்
சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையிற் புதைத்து
மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்றுன்
அந்திவந் தடைந்த தாயைக் கண்டவான் கன்றி னன்னுன்.
2

39 நின்றவன் தன்னை நோக்கி இரும்பினு லியன்ற நெஞ்சிற்
கொன்றுழல் கூற்ற மென்னும் பெயரின்றிக் கொடுமை
பூண்டாள்
இன்றெனக் குணர்த்த லாவ தேயதே யென்னின் ஆகும்
ஒன்றுனக் குந்தை மைந்த உரைப்பதோர் உரையுண்
டென்றுள். 3

---

37. ஆயன—அப்படிப்பட்டவை: இராமனை முனிவர் வாழ்த்தியமை முதலியன. வேலை—சமயம். அயர்ந்து தேருத் தூயவன்—மூர்ச்சித்துத் தெளியாத தயரதன். சூழல்—இடம். துருவினன் வருதல் நோக்கி—கண் பார்வையால் துருவி வருவதைப் பார்த்து. இவன் அரசனிடம் சென்றுல் அவன் தன்வாயினுற் கூறுன்; ஆகவே நானே இதைச் சொல்லுவேன், என்று யமனைப் போன்று தனியளாய் வந்தாள். இது—இரு வரங்களை அளித்த செய்தி.

38. சிந்துரத்தையும் பவளத்தையும் போன்று சிவந்த வாய். சிந்துரம்—செந்நிறப் பொடி. சுந்தரம்—அழகு. தானை மடக்குற—(அடக்கத்திற்கு அறிகுறியாக) ஆடையை மடக்க. துவண்டு—வளைந்து. (அயோத்தி: 87.)

39. முதலிரண்டு அடிகள் 'கூற்றென' என்பதன் விரி. நெஞ்சில்—மனத்திலே. இரும்பினுல் செய்தாற் போன்ற வலிய மனத்தின் கண்ணே கூற்றத்தின் கொடுமையையும் பூண்டவள். பாசக்கயிறு முதலியன இல்லாமலே நின்ற இடத்திலிருந்தே கொடுமை செய்தலால் 'கூற்றமென்னும் பெயரின்றிக் கொடுமை பூண்டாள்' எனப்பட்டது. தான் கூறப்போவதைத் தசரதனிடம் அறுத்துப் பேசியது போலன்றி ஒருவாறு இழுத்து இழுத்துப் பேசுகின்றுள். 'இன்றையதினம் எனக்கு உணர்த்தற்குரியது; பொருத்தமாயின் யான் தெரிவிக்கலாகும்: உன் தந்தை உனக்கு உரைக்க நின்றதொரு வார்த்தை உண்டு' என்று கூறி, இராமபிரான் விடையை எதிர்பார்த்து நின்றுள். ஏயதே என்னின்—பொருந்தியதானுல். ஆகும்—(யான்) தெரிவிக்கலாகும்.

40 எந்தையே ஏவ நீரே
உரைசெய இயைவ துண்டேல்
உய்ந்தனன் அடியேன் என்னிற்
பிறந்தவர் உளரோ வாழி
வந்ததென் தவத்தி னாய
வருபயன் மற்றொன் றுண்டோ
தந்தையும் தாயும் நீரே
தலைநின்றேன் பணிமின் என்றான். 4

41 ஆழிசூழ் உலக மெல்லாம்
பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித்
தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப்
புண்ணியத் துறைக ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென்
றியம்பினன் அரசன் என்றாள். 5

42 இப்பொழு தெம்ம னோரால்
இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன்
திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்புஅவ்
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா
மரையினை வென்ற தம்மா. 6

---

40. இயைவது—பொருந்துவது: இருவருக்கும் உகப்பானது ஒன்றிருந்தால். என்னைவிடப் பிறந்த பயனை முற்ற எய்தினவர் உளரோ. வாழி—முன்னிலை அசை. என் தவத்தினாய வருபயன் வந்தது; (இனி விரும்பத்தக்கது) மற்றொன்றுண்டோ?. தலை நின்றேன்—நீவிர் கூறுவதைச் சிரமேற்கொண்டு நின்றேன். பணிமின்—கட்டளையிடுமின்.

41. ஆழி—கடல். தாழ் இரும் சடை—தொங்குகின்ற பெரிய சடை. பூழி—புழுதி.

42. எளிதே—சுலபமோ அன்று. செப்ப அரும் குணத்து இராமன். செவ்வி—அழகு. அவ்வாசகம் உணரக்கேட்ட முன்புள்ள செவ்வி, அதைக் கேட்ட பின்பு எழுந்த செவ்வியை ஒக்குமோ? ஒவ்வாது; ஏனெனில் முன்பு செந்தாமரை போன்ற முகம் பின்பு அப்பொழுதலர்ந்த செந்தாமரையையும் வென்றுவிட்டது.

43 தெருளுடை மனத்து மன்னன்
ஏவலில் திறம்ப அஞ்சி
இருளுடை உலகங் காக்கும்
இன்னலுக் கியைந்து நின்றான்
உருளுடைச் சகடம் பூண்ட
உடையவ னுய்த்த காரேறு
அருளுடை ஒருவன் தூண்ட
அப்பிணி அவிழ்ந்த தொத்தான். 7

44 மன்னவன் பணியன் றாகில்
நும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றோ
என்னினி உறுதி யப்பால்
இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கானம் இன்றே
போகின்றேன் விடையுங் கொண்டேன். 8

---

43. தெருள்—தெளிவு. திறம்ப—பிறழ. இருள்—அஞ்ஞானம். இருளுடையுலகம் அரசனின்றி வருந்துமே என்று கருதி, தெளிவுடைய மனத்தனாகிய அரசன் ஏவியதை மறுக்க அஞ்சி அரசு செய்தலாகிய இன்னலுக்கு இசைந்தான். இன்னல்—கஷ்டம். உருள்—சக்கரம். சகடம்—வண்டி. உடையவன்—எஜமானன். கார் ஏறு—கரிய காளை.

44. பணி—கட்டளை. பின்னவன்—தம்பி பரதன். செல்வம்—அரசச் செல்வம். அப்பால்—பின்பு. மின்னொளிர் கானம்—கைகேயி கூறியதைக் கேட்டவுடனேயே இராமபிரான் மனம் காடு செல்வதில் ஊன்றி நிற்ப, காடு அவன் அகக்கண் முன்னே தோன்றி, மின்னி, வழிகாட்டி அழைப்பது போன்று காட்சியளித்தது.

## 16. கோசலையின் துயரம்.

சிற்றன்னையாகிய கைகேயியினிடம் விடைபெற்றபின் இராமபிரான் கோசலையினிடம் விடைபெறும் பொருட்டுச் சென்றனன். அப்படிச் சென்றபொழுது இருவருக்குமிடையே நடந்த பேச்சின் முற்பகுதி இங்கே காணப்படும்.

இராமபிரான், தாயின் உள்ளம் வேறுபட்டு வருந்தாதிருக்கும்படி நிகழ்ந்தவற்றைக் கூறுந்திறனும், சிற்றன்னைக்கும் பெற்ற தாய்க்குமுள்ள அன்பின் விகற்பமும், மகப்பிரிவு கருதி அவள் கன்று பிரிந்துழிக் கறவை யொப்பக் கலங்கியதும் செவ்வனே காட்டப்பட்டுள்ளன. முதல் நாள் தன்மகனுக்கு அளித்த அரசினை மறுநாள் மாற்றுள் மகனுக்கு ஈந்த அரசனிடம் அன்பு குன்றாமல் தன் கற்பு நெறியுடன் மகவன்பையும் இசைவிக்கும் கோசலையின் பெருந்தன்மையை ஆசிரியர் காட்டும் சீரிய முறை அறிஞர் ஆராய்தற்குரியது.

[தே. ப:—நகர் நீங்கு படலம் 1—14.]

45 என்றுகொண் டினைய கூறி
இணையடி இறைஞ்சி மீட்டுந்
தன்றுணைத் தாதை பாதம்
அத்திசை நோக்கித் தாழ்ந்து
பொன்றிணி போதி னுளும்
பூமியும் புலம்பி நையக்
குன்றினு முயர்ந்த தோளான்
கோசலை கோயில் புக்கான். 1

46 குழைக்கின்ற கவரி யின்றிக்
கொற்றவெண் குடையு மின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத்
தருமம்பின் இரங்கி ஏக

---

45. இனைய—முன்கவியில் கூறியன போன்றவற்றை. இணையடி இறைஞ்சி—கைகேயியின் இரண்டு பாதங்களையும் வணங்கி. தன் தாதை துணைப் பாதம். திணி பொன் போதினுள்—நெருங்கிய பொற்றாமரையிலுள்ள திருமகள். புலம்பி நைய—அழுது வருந்த. குன்றினும் உயர்ந்த தோளான்—அவள் வாசகமுணரக் கேட்டபொழுது முகம் அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது; விடைபெற்று மீண்டபொழுது உவகை உடலினும் பரவி முன்பு குன்றனைய தோள், குன்றினும் உயர்ந்தது, பாரம் இறக்கி வைத்தாற் போன்று.

46. குழைக்கின்ற- வீசுகின்ற. இழைக்கின்ற விதி—நன்மை தீமைகளை ஆக்கி அமைக்கின்ற ஊழ்வினை. தருமம்—அறக்கடவுள். என்று என்று தழைக்கின்ற உள்ளத் தன்னுள்—குழைக்கின்ற கவரியோடு கொற்ற வெண்குடை

மழைக்குன்ற மனையான் மௌலி
கவித்தனன் வருமென் றென்று
தழைக்கின்ற உள்ளத் தன்னாள்
முன்னொரு தமியன் சென்றான். 2

47 புனைந்திலன் மௌலி குஞ்சி
மஞ்சனப் புனித நீரால்
நனைந்திலன் என்கொல் என்னும்
ஐயத்தாள் நளின பாதம்
வனைந்தபொற் கழற்கால் வீரன்
வணங்கலும் குழைந்து வாழ்த்தி
நினைந்ததென் இடையூ றுண்டோ
நெடுமுடி புனைதற் கென்றாள். 3

வேறு

48 மங்கை அம்மொழி கூறலு மானவன்
செங்கை கூப்பிநின் காதல் திருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின் றானென்றான். 4

---

நிழலில் முடிபுனைந்து மழைக்குன்றமனையான் வருவான் என்று பல முறை கற்பனை செய்து, இங்ஙனம் நினையுந்தொறும் மகிழ்ச்சி பொங்கிப் பெருகுகின்ற உள்ளத்தையுடைய கோசலை.

47. குஞ்சி மஞ்சனப் புனித நீரால் நனைந்திலன்—முடி புனைதற்கு முன்னதாக நிகழும் தூய நீராட்டமும் நிகழ்ந்ததாகக் காணவில்லை: குஞ்சியில் ஈரப் பசையும் காணப்படவில்லை. என் கொல்—என்ன காரணம். என்ற சிந்தையில் மூழ்கியிருந்த அளவில் வணங்கினான். நளினம்—தாமரை. குழைந்து வாழ்த்தி—மனமுருகி வாழ்த்தி. நினைந்தது என்—அரசன் கருதிய கருமம் என்னவாய் முடிந்தது?

48. இராமபிரான் முழுவதையுங் கூறாமல் ஒவ்வொன்றாகக் கூறுகின்றான். மானவன்—மனிதன்; ஈண்டு வைவசுவத மனுவின் குலத்திற் பிறந்த இராமபிரான். பங்கம்—குற்றம். துங்கம் மாமுடி—உயர்வாகிய பெருமை பொருந்திய முடி.

49 முறைமை யன்றென்ப தொன்றுண்டு மும்மையின்
நிறைகு ணத்தவன் நின்னினும் நல்லனால்
குறைவி லன்னெனக் கூறினாள் நால்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள். 5

50 என்று பின்னரும் மன்னவன் ஏவியது
அன்றெ னாமை மகனே உனக்கறன்
நன்று நும்பிக்கு நானிலம் நீகொடுத்து
ஒன்றி வாழுதி ஊழி பலவென்றாள். 6

51 தாயு ரைத்தசொற் கேட்டுத் தழைக்கின்ற
தூய சிந்தையத் தோமில் குணத்தினான்
நாய கன்னெனை நன்னெறி உய்ப்பதற்கு
ஏய துண்டோர் பணியென் றியம்பினான். 7

52 ஈண்டு ரைத்த பணியென்னை யென்றவட்கு
ஆண்டொ ரேழினொ டேழகன் கானிடை
மாண்ட மாதவத் தோருடன் வைகிப்பின்
மீண்டு நீவர வேண்டுமென் றானென்றான். 8

53 ஆங்கவ் வாசக மென்னும் அனல்குழை
தூங்கு தன்செவி யிற்றொட ராமுனம்

---

49. முறைமையன்று—அரசநீதியன்று. நிறை குணத்தவன் மும்மையின் நல்லன் நின்னினும் நல்லன். மும்மையின்—மூவுலகினும். மறு—குற்றம். அன்பினில்—அன்பு காட்டுதலில்.

50. மன்னவன் ஏவியது அன்றெனாமை மகனே உனக்கு அறன்—அரசன் முதலில் உன்னை ஆளும்படி கட்டளையிட்டளித்த அரசினை அவனே அன்று என்று மறுத்தான்: ஆகவே வாய்மையின் விலகினான் என்று உலகத்தவர் கூறாதபடி, நடந்து கொள்ளுதல் மகனாகிய உனக்கு அறமாகும்; ஆகவே நீயே நல்ல மாதிரியாக உன் தம்பிக்கு அரசைக் கொடுத்து ஒன்றுபட்டு வாழுதி.

51. தழைக்கின்ற தூய சிந்தை அ தோம் இல் குணத்தினான்—தான் முடி இழந்தமைக்கு வருந்தாமலும், பரதன் மீது வைத்த அன்பு மாறாமலும், அரசன் வாய்மையைப் புறக்கணியாமலும் கூறிய சொற்களைக் கேட்டு மகிழ்தற்குக் காரணமான தூய மனமும் குற்றமற்ற குணமுமுள்ள அவ்விராம பிரான். ஏயது—ஏவியது. பணி—கட்டளை.

52. மாண்ட—மாட்சிமைப்பட்ட.

53. இது முதல் கோசலையின் துயரம் விவரிக்கப்படுகின்றது. குழை தூங்கு செவி—காதணிகள் அசைகின்ற செவி. தொடரா முனம்—விழுந்ததும்

ஏங்கி னாள்இளைத் தாள்திகைத் தாள்மனம்
வீங்கி னாள்விம்மி னாள்விழுந் தாளரோ. 9

54 வஞ்ச மோமக னேயுனை மாநிலம்
தஞ்ச மாகநீ தாங்கென்ற வாசகம்
நஞ்ச மோவினி நானுயிர் வாழ்வனோ
அஞ்சும் அஞ்சுமென் ஆருயிர் அஞ்சுமால். 10

55 கையைக் கையின் நெரிக்குந்தன் காதலன்
வைகு மாலிலை யன்ன வயிற்றினைப்
பெய்வ ளைத்தளி ராற்பிசை யும்புகை
வெய்து யிர்த்து விழுங்கும் புழுங்குமால். 11

56 நன்று மன்னன் கருணை யெனாநகும்
நின்ற மைந்தனை நோக்கி நெடுஞ்சுரத்து
என்று போவ தெனாவெழும் இன்னுயிர்
பொன்றும் போதுற்ற துற்றனள் போலுமே. 12

57 அன்பி ழைத்த மனத்தர சற்குநீ
என்பி ழைத்தனை என்றுநின் றேங்குமால்

---

விழாததும்; மனத்தில் தைக்கு முன்னமேயே. ஏங்கினாள்—இரங்கினாள். இளைத்தாள்—தளர்ந்தாள்; மெலிந்தாள். திகைத்தாள் மனம்—மனம் பிரமித்தாள். வீங்கினாள்—பொருமினாள். விழுந்தாள்—அறிவு கெட்டு நிலத்தில் விழுந்தாள்.

54. மாநிலம் தஞ்சமாக—பெரிய பூமியிலுள்ள உயிர்கள் உன் அடைக்கலமாக. அவ் வாசகம் வஞ்சமோ நஞ்சமோ? அஞ்சும் அஞ்சும்—பெரிதும் அஞ்சும்.

55. நெரித்தல்—பிசைதல். தன் மகன் இருந்த, திருமால் கண்வளர்ந்த ஆலம் இலை போன்ற வயிறு. தளிர்—தளிர் போன்ற கைகள். புகையைப் பெரு மூச்சாக விடுவாள். விழுங்கும்—ஒன்றைச் சொல்ல ஆரம்பித்து அதைச் சொல்ல முடியாமல் உள்ளே அடக்கிக் கொள்வாள். புழுங்கும்—வெம்புவாள்.

56. எழும்—உணர்ச்சி மிகுதியினாலே எழுந்திருப்பாள். உயிர் பொன்றும் போது உற்றது—உயிர் நீங்கும் பொழுது படுந்துன்பங்களை. ஈற்றடி இது வரையில் விரித்துக் கூறிய துன்பத்தை உவமை வாயிலாகத் தொகுத்துக் கூறிற்று. போலும்—அசை.

57. இழைத்த—செய்த: என் பிழைத்தனை—யாது பிழை செய்தாய்? முன் பிழைத்த வறுமை—முற் பிறப்பில் பிழை செய்த காரணத்தால் வந்த வறுமை: இன்றேல், முன்பு இழைத்த வறுமை—முற் பிறப்பிற் செய்த வினை

முன்பி ழைத்த வறுமையின் முற்றினோர்
பொன்பி ழைக்கப் பொதிந்தனர் போலுமே. 13

58 அறமெ னக்கிலை யோவெனும் ஆவிநைந்து
இறவ டுத்ததென் தெய்வதங் காளெனும்
பிறவி சைப்பதென் கன்று பிரிந்துழிக்
கறவை யொப்பக் கரைந்து கலங்கினாள். 14

---

யின் காரணமாக வந்த வறுமை. முற்றினோர்—முதிர்ந்தோர். பொன் பிழைக்க—கைக்கெட்டிய பொருள் வாய்க் கெட்டாதது போன்று கைதவறிப் போக. பொதிந்தனர் போல—பெருந் துயரால் முகத்தை மூடிக்கொண்டு வருந்தினவர்களைப் போல. (ஏங்கினாள்.)

58. முன் செய்த அறம் இப்பொழுது எனக்கு இல்லாமற் போயிற்றோ என்பாள். இற—அழியும்படி. அடுத்தது என்—வந்து சார்ந்த தீவினை யாதோ? கன்று பிரிந்துழிக் கறவை ஒப்பக் கலங்கினாள்—இது வரையிற் கூறிய நீள் துயரத்தை உவமை வாயிலாகத் தொகுத்து முடிக்கின்றது. (அயோத்தி: 158.) கறவை—பசு.

## 17. சுமித்திரை இலக்குவற்குக் கூறிய வாய்மொழி.

இராமலக்குமணர் சுமித்திரை கோயில் புக்கனர். அவள் மிகவருந்திப் படிமேற்புரண்டு அழ, இராமபிரான் அவளைத் தேற்றினான். அப்பொழுது கைகேயி அனுப்பிய மரவுரியைக் கைக்கொண்டு இலக்குமணன் அன்னையை வணங்கி, "இராம பிரானுடன் ஏகும்படி கட்டளையிட்டால் அதுவே துணையாகும்," என்று கூற, அவள் மகனைப் பார்த்துக் கூறியன இந்த இரண்டு செய்யுள்.

இப்பகுதியில் கைகேயிக்கும் சுமித்திரைக்கு முள்ள வேறு பாடு தெற்றெனப் புலப்படுவதோடு, 'இராமன் பின்பு பிறந்தானும் உளனென்னப் பிரியாதான் தனைப்பயந்த' சுமித்திரையினது அன்பின் தூய்மையும் சீர்மையும் விளங்கும். (அயோத்தி: 160.) இத்தகைய 'அறந்தானே என்கின்ற' பெரியாளது ஆழ்ந்த சிந்தனை, தூய உணர்ச்சிகளினின்றும் தோன்றியவை இச் சொற்கள் என்பது பொருளை உற்றுநோக்கத் தெற்றென விளங்கும்.

[தெ. ப:—நகர் நீங்கு படலம்: 150—151.]

59 ஆகாத தன்றுனக்கு அவ்வனம் இவ்வ யோத்தி
மாகாத லிராமனம் மன்னவன் வைய மீந்தும்
போகா உயிர்த்தாய ரும்பூங்குழற் சீதை யென்றே
ஏகாய் இனிஇவ் வயின்நிற்றலும் ஏதம் என்ருள். 1

60 பின்னும் பகர்வாள் மகனேஇவன் பின்செல் தம்பி
என்னும் படியன்று அடியாரினில் ஏவல் செய்தி

---

59. ஆகாதது அன்று உனக்கு—இராமனுக்கு ஆகும் என்றது உனக்கு ஆகாமையில்லே; உனக்கும் அது தக்கதே. அவ்வனம் இவ் அயோத்தி—இராமபிரான் வசிக்கப் போகும் அந்த மின்னெளிர் கானமே அவன் விட்டு நீங்கும் இந்த அயோத்தி: மா காதல் இராமன் அ மன்னவன்—உன்னிடம் பேரன்புள்ள இராமனே இனி உனக்கு அந்தத் தயரத மன்னன்: வையம் ஈந்தும் போகா உயிர்த்தாயரும் பூ குழல் சீதை—வையம் ஈந்த பின்பும் ஊழ் வினேயால் அரிதின் உயிர்தரித்து நிற்கும் அன்னேயர் சீதாபிராட்டியே: என்று ஏகாய்—என்று இங்ஙனமெல்லாம் கருதிச் செல்லுதி. இராமன் போன பின்பு இவ்வயோத்தி பாழ்படும்; அவன்மீது ஆராத காதல்கொண்ட அரச னும் உயிர் தரித்திரான்; அவனே இழந்து பெருந்துன்பமுற்று வருந்தும் அன்னேயர் உயிர் வாழ்ந்தும் பயனிலர்: ஆதலாலே கானகமே அயோத்தி என்றும், இராமனே தந்தை என்றும், சீதையே அன்னே என்றும் கருதி உடன் ஏகுதி. இனி—இதற்கு மேல். ஒரு கணமேனும் இவ்விடம் நேரம் போக்குதல் பிழையாகும்.

இனி இச்செய்யுளில் சுமித்திரை கருதாமலே மேல்வரும் கதை நிகழ்ச்சிக்கு இயைந்த மற்றெரு பொருளும் குறிப்பாகத் தோன்றும். அப்பொருள் வரு மாறு:—அவ்வனம் இவ் அயோத்தி—இராமன் நீங்கிய பின் இவ்வயோத்தி பாழ்படுவதைப் போல, அவன் வாழப்போகும் காடும் பாழ்படும்: அவ்விடங் களே விட்டு வேறு இடங்களுக்குச் செல்லுவான். மாகாதல் இராமன் அம் மன்னவன்—தயரதன் கையேயி சொற்கொண்டு உன் தமயனேக் காடு செல்ல விட்டது போன்று, மனேவியின் மீது பெரிய காதல் கொண்ட இராமனும் அவள் சொற்கொண்டு மாயமான் பின்னே சென்று பல துன்பங்களே விலேக்கு வாங்குவான்: போகா உயிர்த்தாயரும் பூங்குழற் சீதை—போகா உயிரோடு இராமனேப் பிரிந்து நாங்கள் படுவது போன்ற துன்பத்தை வஞ்சனே மானின் பின் போக்கி இராமனேப் பிரிந்து உன்னேயும் வழிக்கொள்வாய் என்று, போக விட்டு நஞ்சனேயான் அகம்புகுந்து பத்து மாதம் சிறையிருந்து படாத துன் பம் படப்போகின்ருள். இங்ஙனம் பல பேராபத்துக்கள் அடுக்கிவர நிற்ற லால் இனி ஒரு கணமேனும் நீ காலந்தாழ்ப்பது பழிக்கு இடமாகும்.

60. இவன் பின்செல் தம்பி என்னும் படி அன்று—'அதுவே துணே யாம்' என்று கூறியதுபோன்று இவனுக்குத் துணேயாகப் பின்னே செல்லும் தம்பி என்ற படியிலன்று நீ ஒழுக வேண்டுவது. அன்று—அன்றி. அடியாரி னில் ஏவல் செய்தி—இராமனே இறைவனுகக் கருதி அவன் அடியாரைப்

மன்னும் நகர்க்கே இவன்வந்திடின் வாவ தன்றேல்
முன்னம் முடியென் றனள்வார்விழி சோர நின்றாள். 2

போலவே அவனை விட்டு நீங்காது எல்லா நிலைமைகளிலும் எல்லாவிதமான பணிவிடைகளும் செய்வாய். அது அன்றேல்—அவன் அப்படி நகருக்கு வாராமல் இடையூறு நேருமாயின். முன்னம் முடி—முன்னே உன் உயிரைக் கொடுத்துவிடு. வார் விழி சோர நின்றாள்—இதைக் கூறும்பொழுது அவள் நிலைமை: நீண்ட கண்களினின்றும் கண்ணீர் பெருக நின்றாள்.

## 18. பிராட்டி வனஞ் செல எழுதல்.

வசிட்ட முனிவனிடம் விடைபெற்று நகர்வீதியூடே தன் மாளிகையை நோக்கிச் சென்ற இராமபிரான் சீதாபிராட்டியிருந்த இடத்தை அணுகினன். பிராட்டி அவனைக் கண்டது முதல் மூவரும் நகர் நீங்கியது வரை நிகழ்ந்தவற்றைக் கூறுவது இப்பகுதி.

இதில் கம்பர் தரும் காட்சி இந்நூல் முழுவதிலும் மிகச் சிறந்த பகுதிகளுள் ஒன்றாக மதிக்கற்பாலது. தாயர் முதலியோர் புடை வந்து பொரும, மரவுரி உடுத்து இராமபிரான் வரக் கண்ட மிதிலைச் செல்வி எழுது பாவை போல் ஒரு கணம் திகைப்புற்று அசைவற்று நின்று மனத்துணுக்கமோடு எழுந்தவள் உற்றுநின்ற துயரம் இன்னதென்றறிய மாட்டாது அலமந்து வழிந்த கண்ணீருடன் மேனி நடுங்க, ‘என்னையுற்றது?’ என்று இராகவனை வினவினாள். அவன் கூறிய விடை—‘வருந்தலை நீ, நீங்குவென் யான்’ என்ற சொல்—செவிசுட விம்மித் தேம்பினாள்: அதை எண்ணி எண்ணி உயிருமிழா நின்றாள். ‘நின் பிரிவினுஞ் சுடுமோ பெருங்காடு?’ என்று கூறி, உள்ளே சென்று மரவுரி புனைந்தவளாய் உடன் செல்லத் தீர்மானித்து, பக்கத்திலே வந்து நின்றாள்: என்ன செய்யலாம் என்ற சிந்தனையிலாழ்திருந்த இராமபிரானது நீள்கரம் பற்றினாள். முன்பு கிளர்ந்தெழுந்த வன்துயர் இப்பொது முன்பு பெற்றறியா இன்பமாக மாறிற்று. அகத்தெழுந்த ஆனந்தம் முகத்தில் வெண்ணகையாகவும் குரலில் கோகிலத்தை வென்ற குதலையாகவும் பரிணமிக்கலாயிற்று. இராமபிரான் மறுபடியும் சில கூறி, அவளைத் தடுக்க முயன்றான். ‘என்னைக் கைவிட்ட பின் எல்லாம் இன்பங்கொலாம்?’ என்று

சினந்து கூறி, அவ்விடையூற்றையுங் களைந்து நின்றாள். இவள் மனநிலையை யுணர்ந்த பெருந்தகை மறுமாற்ற மின்றி உடனழைத்துச் செல்லலுற்றான். இங்ஙனம் கிளர்ந்தெழுந்த பெருந் துயர் உடன் செல்லும் உவகையால் மறுகணம் பேரானந்தமாகத் திகழ்ந்ததை ஆசிரியர் காட்டுந் திறம் பெரிதும் இன்புறற் பாலது.

மேலும் புறந்து நிகழ் காட்சிகளை அவ்வவருடைய அகத்தே எழும் சிந்தனை, உணர்ச்சி முதலியன செவ்வனே புலப்படும் வண்ணம் தொடுத்தமைத்த சொல்லாற்றலும் ஆராயற் பாலது.

[தெ. ப:—நகர் நீங்கு படலம்: 218—222, 224—225, 227—234.]

61 அழுது தாயரோடு அருந்தவர் அந்தணர் அரசர்
புழுதி யாடிய மெய்யினர் புடைவந்து பொரும
பழுதில் சீரையி னுடையினன் வருப்படி பாரா
எழுது பாவையன் னுள்மனத் துணுக்கமொ டெழுந்தாள். 1

62 எழுந்த மங்கையை மாமியர் தழுவின ரேந்திப்
பொழிந்த உண்கணீர்ப் புதுப்புன லாட்டினர் புலம்ப
அழிந்த சிந்தையள் அன்னமீ தின்னதென் றறியாள்
வழிந்த நீர்நெடுங் கண்ணினுள் வள்ளலை நோக்கி. 2

---

61. தாயர் அருந்தவர் அரசர் முதலாயினோர் தயரதன் மாளிகையைத் தாண்டி வரும்பொழுதுமுதல் இராமனைப் பின்தொடர்ந்து வந்தவர்கள். புடை வந்து—பக்கங்களிலே வந்து. பொரும—விம்ம. முதலில் இவர்கள் பொருமுதலையும் பின்பு இராமன் மரவுரி தரித்து வருதலையும் கண்டாள். வரும்படி—வருகின்ற வகையை. எழுது பாவை—இரண்டையுங் கண்டதும் சித்திரப் பாவை போல் ஒரு கணம் அசைவற்றிருந்தாள். (பின்பு) மனத்துணுக்கமோடு எழுந்தாள்—சரீரம் அசைவற்றிருந்த போதிலும் நெஞ்சத்தில் அச்சம் துடி துடித்தது; அந்நிலையில் முறைப்படி எழுந்தாள்.

62. உண் கண் நீர்—மையுண்ட கண்ணினின்றும் வரும் நீர். அக்கண்ணீரால் நீராட்டினவராகிப் புலம்பினர். அழிந்த சிந்தையள்—மனத் துணுக்கத்தாலும் புடை வந்தவர் அடைந்த பெருந்துக்கத்தாலும் உருத்தெரியாமல் அழிந்த மனத்தினளாய பிராட்டி; ஒன்றையிட்டுச் சிந்திக்கும் நிலையை இழந்தவள். அன்னம் ஈது இன்னதென்று அறியாள்—சனகன் பெற்ற அன்னமாயினும் இப்பொழுது இதன் காரணம் யாதென உணர மாட்டாதவளாகி. வழிந்த நீர் நெடுங்கண்ணினுள்—இதற்கிடையில் கண்ணீரும் தானாகவே வழியலாயிற்று.

## வேறு

63 பொன்னை யுற்ற பொலங்கழ லோய்புகழ்
மன்னை யுற்றதுண் டோமற்றிவ் வன்துயர்
என்னை யுற்ற தியம்பென் றியம்பினாள்
மின்னை யுற்ற நடுக்கத்து மேனியாள். 3

64 பொருவில் எம்பி புவிபுரப் பான்புகழ்
இருவ ராணையும் ஏந்தினன் இன்றுபோய்க்
கருவி மாமழைக் கற்கடங் கண்டுநான்
வருவன் ஈண்டு வருந்தலை நீஎன்றான். 4

65 நாய கன்வனம் நண்ணலுற் றானென்றும்
மேய மண்ணிழந் தானென்றும் விம்மலள்

---

63. 'பொன்னாலாகிய அழகிய வீரக்கழலையுடையவனே!. புகழ் மிக்க அரசனுக்கு நேரிட்ட தீங்கு ஏதேனுமுண்டோ? இவ்வலிய துயரத்துக்குக் காரணம் யாது? நேர்ந்தது இன்னதென்று கூறுவாயாக' என்று கூறினாள். மின்னை உற்ற நடுக்கத்து மேனியாள்—அப்படிக் கூறும் பொழுதைய நிலை: ஏற்கனவே மின்னலைப்போன்ற மேனி அம்மின்னல் நடுங்குவது போன்று நடுங்கிற்று. நடுக்கத்து—நடுங்குதலையுடைய.

64. பொருவு—ஒப்பு. புவி புரப்பான்—புவியை ஆள்வான். புகழ் இருவர்—தயரதனும் கைகேயியும். ஏந்தினன்—தாங்கினவனாகி. கருவி மாமழைக் கற்கடம்—உலகம் நடை பெறுதற்குக் காரணமாகிய பெரிய மேகங்கள் தங்குகின்ற வனம்: கைகேயியிடம் விடைகொண்டபொழுது 'மின்னொளிர் கானம்' இப்பொழுது 'கருவி மாமழைக் கற்கடமாக' இராமன் அகக் கண்ணின் முன் தோன்றிற்று: இராமபிரான் சிந்தனையில் தான் செல்லும் காடு ஊன்றிய தன்மை விளங்கும். வருந்தலை—வருந்தாதே. சீதை வருந்துவாள் என்று மீண்டுவருங் காலத்தைக் குறிப்பிட்டிலன்.

65. மேய மண்—இயல்பாகவே தனக்குரிய பூமியை. விம்மலள்—வருந்தினாளல்லள். விம்மிய காரணம்: 'நீ வருந்தலை; நீங்குவன் யான்' என்று அவன் கூறியதே யாம்: 'வருந்தலை' என்பதே போதுமானதாயிருப்ப 'நீ' என்று வேண்டாது கூறினன்: 'நீங்குவன்' என்ற அளவோடு நில்லாது 'யான்' என்று சேர்த்துக் கூறினன்: இப்படி வேறுபாடு ஊன்றக் கூறினன். கூறிய பொருளேயன்றிச் சொல்லும் முறையுந் துன்பந் தருவதாயிருந்தது. தீய வெம் சொல்:—தீய சொல்—தீமையை உணர்த்தும் சொல்: வெம் சொல்—கேட்கும் பொழுதே

நீவ ருந்தலை நீங்குவன் யானென்ற
தீய வெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள். 5

66 அன்ன தன்மையள் ஐயனும் அன்னையும்
சொன்ன செய்யத் துணிந்தது தூயதே
என்னை என்னை இருத்தியென் றானெனா
உன்ன உன்ன உயிருமி ழாநின்றாள். 6

67 வல்ல ரக்கரின் மால்வரை போய்விழுந்து
அல்ல ரக்கின் உருக்கழல் காட்டதர்க்

---

பொறுக்க முடியாத துன்பந்தருஞ் சொல். செவி சுட—கேட்டவுடனேயே செவியை நெருப்புச் சுட்டது போன்று வருத்த. தேம்புவாள்—முன்பு விம்மினவள் இப்பொழுது தேம்பித் தேம்பி வருந்தலானாள்.

66. என்னை என்னை—மனைவியாகிய என்னை; தன்னைப்பிரிந்தால் நீரைப் பிரிந்த மீன் போன்று ஒரு கணமும் உயிர் வாழ மாட்டாத தன்மையளாய என்னை. உன்ன உன்ன—நினைக்குந்தோறும். உயிரைக் கக்குவது போன்று பெருமூச்சு விட்டாள்.

67. பிராட்டி பட்டதுன்பத்தைக் காண தாடகையைக் கொன்ற கொடிய வனம் நினைவில் எழுந்தது; அத்தகைய இடங்களினூடே இவளாற் செல்ல இயலா தென்று கருதி இரவும் பகலும் வெம்மை மாறாத பருக்கைக் கற்கள் மிகுந்த பயங்கரமான மலைகளுள்ள காட்டுப் பாதையில் உன்னால் நடக்க இயலாது என்று கூறுகின்றான்.

வல் அரக்கரின் மால் வரை—அங்கு வசிக்கின்ற தாடகை போன்ற வன்கண்மை மிக்க அரக்கரைப் போன்று காணப்படும் பயங்கரமான மலைகளினூடே. போய் விழுந்து—அங்கு ஒருவர் போய்ச் சேருவது கடினம்; அப்படிப் போனாலும் நடத்தல் என்பது இயலாது; பருக்கைக் கற்களில் கால் வைத்ததும் விழவேண்டும்; அப்படிப்போய் விழுந்து. அப்படி விழுவானேன் என்றால் ஆங்குள்ள பருக்கைக் கற்கள் அத்தகையன: எங்ஙனமெனில்:—அல் அரக்கின் உருக்கு அழல் காட்டு அதர் கல்—பகலிலே சூரிய வெப்பத்தால் அனலிலிட்ட அரக்குப் போன்று உருகியபடி நின்று, இரவு முழுவதும் ஆறாது, தீயினின்றும் வாங்கிய அரக்கின் உருக்கைப் போன்று வெம்மை மாறாத காட்டுவழி முழுவதும் கிடக்கும் பருக்கைக் கற்கள். அதர்—வழி. அல்—இரவு. கல் அரக்கும் கடுமைய அல்ல—கற்கள் தைத்தால் அதைத் தாங்கும் உறுதி பெற்றன அல்ல. சில்—சில; இரண்டு என்ற பொருளில் பயின்று வந்துள்ளது. அரக்கு உண்ட—செம் பஞ்சுக் குழம்பு ஊட்டிய. சேவடிப் போது—சிவந்த பாதங்களாகிய மலர். அனலிலிட உருகும்; எடுக்க

கல்ல ரக்கும் கடுமைய வல்லநின்
சில்ல ரக்குண்ட சேவடிப் போதென்றான். 7

68 பரிவி கந்த மனத்தொடு பற்றிலாது
ஒருவு கின்றனை ஊழி அருக்கனும்
எரியும் என்பது யாண்டையது ஈண்டுநின்
பிரிவி னுஞ்சுடு மோபெருங் காடென்றாள். 8

69 அண்ணல் அன்னசொற் கேட்டனன் அன்றியும்
உண்ணி வந்த கருத்து முணர்ந்தனன்
கண்ணி னீர்க்கடல் கைவிட நேர்கிலன்
எண்ணு கின்றனன் என்செயற் பாற்றெனா. 9

70 அனைய வேலை அகன்மனை எய்தினள்
புனையுஞ் சீரம் துணிந்து புனைந்தனள்
நினைவில் வள்ளல்பின் வந்தயல் நின்றனள்
பனையின் நீள்கரம் பற்றிய கையினாள். 10

---

உருகிய உருவத்தோடு வெம்மை மாறாத அரக்குப் போன்ற கற்கள். நின் சேவடிப் போது போய் விழுந்து அதர்க்கல் அரக்கும் கடுமைய அல்ல.

68. பரிவு—அன்பு; இரக்கம். இரக்கத்தை முற்றாகக் கைவிட்ட மனத்தோடு பற்றுதற்குச் சிறிதும் இடந்தராது விட்டு நீங்கப் பார்க்கின்றாய்: இரக்கந்தானில்லை யென்றாலும் மனைவி என்னும் உரிமையையும் களைந்து பாதுகாக்கும் பொறுப்பினின்றும் வழுவப் பார்க்கின்றாய். ஊழி அருக்கனும் எரியும் என்பது யாண்டையது—பிரளய காலத்துச் சூரியனும் நெருப்புப் பற்றிச் சுடுவது போலச் சுடும் என்பது நின் பிரிவை நோக்க எவ்வளவு குறைந்த படியில் நிற்கும்? அதற்கும் இதற்கும் எவ்வளவு தூரம்? இங்கு யான் நின்னைப் பிரிந்து நிற்கும் பிரிவைக் காட்டிலும் சுடுவது என்று ஒன்றுளதோ? நீ சொல்லும் பெரிய காடு ஊழி அருக்கனில் எவ்வளவு தாழ்ந்தது அவ்வளவு கூடியதன்றோ ஊழியருக்கனை நோக்க நின் பிரிவு. ஆகையால் காடு சுடும் என்பது யாண்டையது?

69. உள்நிவந்த கருத்து—மனத்தில் எழுந்த எண்ணம்; அதாவது எப்படியும் உடன் செல்லவேண்டும் என்ன கருத்து: இன்றேல் உயிர் நீங்குவாள் என்பது குறிப்பு. கண்ணினீர்கடல் கைவிட—கண்ணீராகிய கடலில் மூழ்கும்படி விட்டுச் செல்ல: துன்பக் கடலுள் துவளும்படி விட்டு நீங்குதல் என்பது முழுவதும் கை கழுவுதலேயாம்: அப்படிக் கைவிட்டுச் செல்ல, நேர்கிலன்—உடன்படானாய். எண்ணுகின்றனன்—சிந்திப்பானாயினான்.

70. அனைய வேலை—அப்பொழுது. சீரம்—மரவுரி. நினைவில் வள்ளல்—சிந்தனையில் ஆழ்ந்த இராமபிரான். அவன்பின் வந்து அயல் நின்றான்; பின்பு கரம் பற்றினாள்.

71 தாயர் தவ்வையர் தன்துணைச் சேடியர்
ஆய மன்னிய அன்பினர் என்றிவர்
தீயின் மூழ்கினர் ஒத்தனர் செங்கணான்
தூய தையலை நோக்கினன் சொல்லுவான். 11

72 முல்லை யுங்கடன் முத்தும் எதிர்ப்பினும்
வெல்லும் வெண்ணகை யாய்வினை வுன்னுவாய்
அல்லை போத அமைந்தனை யாதலின்
எல்லை தீர்ந்த இடர்தரு வாயென்றான். 12

73 கொற்ற வன்னது கூறலுங் கோகிலம்
செற்ற தன்ன குதலையள் சீறுவாள்
உற்று நின்ற துயரமி தொன்றுமே
எற்று றந்தபின் இன்பங்கொ லாமென்றாள். 13

74 பிறிதொர் மாற்றம் பெருந்தகை பேசலன்
மறுகி வீழ்ந்தழும் மைந்தரும் மாதரும்
செறுவின் வீழ்ந்த நெடுந்தெருச் சென்றனன்
நெறிபெ றாமை யரிதினின் நீங்குவான். 14

75 சீரை சுற்றித் திருமகள் பின்செல
மூரி விற்கை இளையவன் முன்செல
காரை ஒத்தவன் போப்படி கண்டஅவ்
ஊரை யுற்ற துணர்த்தவும் ஒண்ணுமோ. 15

---

71. தாயார் தவ்வையர்—ஐவகைத் தாயருள் ஈன்றாள் ஒழிந்த மற்றை யோரும், அவர் மக்களாய்த் தனக்கு மூத்தவர்களும். ஆயம்—மகளிர் கூட்டம்.

72. பனையின் நீள்கரம் பற்றி நின்ற போதைய உவகைமிகுதி முதல் இரண்டு அடிகளிற் கூறப்பட்டது. அவளது பொங்கிய உவகையைக்கண்டு அவளது பேதைமைக்கு இரங்கிக் கூறுகின்றான். 'இப்பொழுது நீ பெரிதும் களிக்கின்றாய்: நீ உடன் வருதலின் விளைவினை எண்ணுகின்றாயல்லை: போகச் சித்தமாய்விட்டாய்: ஆதலின் கணக்கற்ற துன்பந் தருவாய். நகை—பற்கள்.

73. கோகிலம் செற்றதன்ன குதலையள்—குயிலின் குரலை வென்றது போன்ற மழலை மொழியினள்: உடன் செல்லும் உவகை பேச்சின் இனிமையி லும் வெளிப்பட்டமை கூறியபடி. சீறுவாள்—கோபிப்பாளாய். உற்று நின்ற —அடைந்த. என் துறந்தபின்.

74. பெருந்தகை—இராமபிரான். இவ்வளவு கடுமையாகப் பேசியும் அதனை உட்கொள்ளாது அவளது உள் நிவந்த கருத்தை எண்ணி உடனழைத் துச் செல்லத் தீர்மானித்தானாதலால் 'பெருந்தகை' என்றார். மறுகி—மனங் கலங்கி. செறுவின் வீழ்ந்த—நெருக்கத்தினால் மிகுந்த. நெறி பெறாமை—வழி பெறாது.

75. மூரி வில்—வலிமையமைந்த வில். கார்—மேகம். ஊர் உற்றது: ஐ—சாரியை.

## 19. மூவரும் மருதவைப்பைக் கடந்து செல்லுதல்.

சுமந்திரனுக்கு விடை கொடுத்தனுப்பியபின் நிலவு வெளிச்சத்திற் சில காவதங் கடந்து மூவரும் சூரியன் உதிப்ப மருத நிலத்தூடு சென்று கங்கைக் கரையை அடைந்தனர். அப்பொழுது மருதநிலக் காட்சிகளைக் கண்டு களித்தவண்ணம் அவர்கள் நடந்து சென்றதைக் கூறுவது இப்பகுதி.

இராமபிரானோடு காடு செல்லத் தீர்மானித்துப் புறப்படும் பொழுதே முல்லையையும் முத்தையும் வென்ற வெண்ணகையோடு, கோகிலஞ் செற்ற குதலையளாய் நின்ற மிதிலைச் செல்வி அவனோடு வழிநடந்த பொழுது இன்பக் காட்சிகளைக் கண்டு, அவ்வின்ப உணர்ச்சி வெளிப்படும்படி நடந்து சென்றாள். இராமபிரானும் புதியதொரு இன்பக் கிளர்ச்சியோடு சென்றான். இங்ஙனம் இருவரது முன்பு அனுபவியாத புதிய உள்ளக் கிளர்ச்சியைச் செறித்துக் காட்டுவது இச்செய்யுள்களில் அமைந்த அரிய இன்னிசை

முன்பு சீதா பிராட்டியின் இயற்கை யழகு கூறப்பட்டது. மற்றோரிடத்தில் நடையழகு கூறப்பட்டது. இங்குச் சேர்த்தியால் விளைந்த அந்தமில் பேரழகும் அதனோடு ஒன்றுபட்ட பெருமித நடையழகும் கூறப்படுகின்றன.

[தெ. ப:—கங்கைப் படலம்: 1—6, 8.]

76 வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோமரக தமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதொர் அழியாஅழ குடையான். 1

---

76. விரி சோதி—விரிகின்ற சோதி. எழுகின்ற ஞாயிற்றினது கிரணங்களின் ஒளி இவன் மேனியினின்றும் விரிகின்ற ஒளியினால் மழுங்க காடு நோக்கி வந்த போதைய திருமேனியின் புகர் கூறப்பட்டது. (அயோத்தி: 42, 45.) உண்டோ இல்லையோ என்று ஐயுறும்படி மிக நுண்ணிய இடையாள். மை—அஞ்சனம். மறி கடல்—அலைகள் மீண்டு மடங்குகின்ற கடல். மை மேனி நிறத்தின் கொழுமைக்கும், மரகதம் அதன் ஒளிக்கும், மறி கடல் அவ்வழகு அலையெறிவது போன்று எங்கும் விரிதற்கும், மழை முகில் காண்போர் மனத்தின் இன்பத்திற்கும் ஒப்பாகக் கூறப்பட்டன. ஐயோ—உவப்பின்கண் வந்தது. ஓர் அழியா அழகு—ஒப்பற்ற அந்தமில் அழகு.

77 அளியன்னதொர் அறல்துன்னிய குழலாள் கடலமிர்தின்
தெளியன்னதொர் மொழியாள்நிறை தவமன்னதொர் செயலாள்
வெளியன்னதொர் இடையாளொடும் விடையன்னதொர் நடையான்
களியன்னமும் மடவன்னமும் நடமாடுவ கண்டான். 2

78 அஞ்சம்பையும் ஐயன்தன தலகம்பையும் அளவா
நஞ்சங்களை வெலவாகிய நயனங்களை யுடையாள்
துஞ்சுங்களி வரிவண்டுகள் குழலின்படி சுழலக்
கஞ்சங்களை மஞ்சன்கழல் நகுகின்றது கண்டாள். 3

---

77. அளி—வண்டுகள். அறல்—கருமணல். வண்டுகளின் தொகுதியைப் போன்ற கூந்தல்; கருமணல் போன்ற கூந்தல்; ஒப்பற்ற கூந்தல்: இத்தகைய கூந்தலையுடையவள். கருமணல் நிறம் பற்றியும் வடிவு பற்றியும் உவமை. தெளி—சாரம். எல்லாப் பண்புகளும் நிறைந்த தவத்தைப் போன்று தூய தொழிலாள். 'நற்பெருந் தவத்தளாய நங்கை' (சுந்தர: 186.) வெளி—ஆகாயம்: 'பொய்யோவெனும் இடையாள்'; கண்ணுக்குப் புலப்படாத இடையாள். விடை—காளை. களி அன்னம்—சேவலன்னம். மட அன்னம்—பெடையன்னம். தம்மைப் போலவே அன்னங்களும் நடமாடுவதைக் கண்டான்.

78. அஞ்சம்பையும் அளவா—முன்பு ஓரம்பினுல் வருந்தியவள் இராமபிரான் மருங்கிருப்ப மன்மதனது ஐந்து அம்புகளையும் வெல்ல வல்லவளானுள்: அளவா—வென்று. அலகு அம்பு—கூரிய அம்பு. அளவா—உவமையால் வென்று; முன்பு கொல்லும் வேல் முதலியவற்றை வென்று மதர்த்த கண் இப்பொழுதைய சேர்த்தியழகினுல் இராமனம்பையுங் கடந்தது. இவ்வளவோடமையாது நஞ்சங்களை வெலவாயாகிய நயனங்களையுடையாள்—முன்பு விடம் போல நலிந்த மாலை, தென்றல், இருள், அன்றில், நிலவு முதலியவற்றையும் வெல்லுதற்கமைந்த கண்களைப் பெற்றவள். துஞ்சும் களி—நிரந்தரமாகத் தங்கிய களிப்பையுடைய. வரி வண்டுகள்—இரேகைகளைப் போன்ற கோடுகளையுடைய வண்டுகள். குழலின்படி சுழல—வேய்ங்குழல் ஓசையை ஒத்த இன்னிசையோடு அதற்கேற்றவாறு சுற்றி வட்டமிட. கஞ்சங்களை—அத்தாமரை மலர்களை. மஞ்சன் கழல்- இராமபிரானது பாதங்கள். நகுகின்றது—ஒப்பாகா வென்று பரிகசிப்பது போன்று மிக்க அழகுடன் விளங்குவதை.

79 மாகந்தமு மகரந்தமு மளகந்நர மதியின்
பாகந்தரு நுதலாளொடு பவளந்தரு மிதழான்
மேகந்தனி வருகின்றது மின்னோடென மிளிர்பூண்
நாகந்தனி வருகின்றது பிடியோடென நடவா. 4

80 தொளைகட்டிய கிளைமுட்டிய சுருதிச்சுவை யமுதின்
கிளைகட்டிய கருவிக்கிள ரிசையிற்பசை நறவின்
விளைகட்டியின் மதுரித்தெழு கிளவிக்கிளர் விழிபோல்
களைகட்டவர் தளைவிட்டெறி குவளைத்தொகை கண்டான். 5

81 பன்னந்துகள் தரளந்தொகு படர்பங்கய நன்னீர்
அன்னந்துயில் வதிதண்டலை அயல்நந்துறை புளினம்

---

79. மா கந்தம்—மிக்க நறுமணம். மகரந்தம்—பூந்தாது. அளகம் தர—முன் உச்சி மயிர் அளிக்க. மதியின் பாகம் தருநுதல்—சந்திரனது துண்டத்தை ஒத்த நெற்றி. பாகம்—ஒரு பகுதி; ஈண்டு எட்டாம் பிறை. பவளம் போன்ற அதரத்தை யுடையவன். மேகம் மின்னலோடு வருகின்றது போலவும், ஆண் யானை பிடியோடு வருகின்றது போலவும் நடந்து 'கண்டான்' என்று அடுத்த கவியிலுள்ள சொல்லைக் கொண்டு முடியும்.

80. கிளை—வேய்ங்குழல்: தொளைகள் பொருந்திய வேய்ங்குழல்: அதாவது புல்லாங்குழல். முட்டிய சுருதிச் சுவை அமுது—(குழலிலே) தாக்கி எழுப்பிய, காதினாலே நுகரப்படும் இசையாகிய இனிய அமுதம். கிளை கட்டிய கருவிக் கிளர் இசை—நரம்புகள் கட்டப்பட்ட யாழினின்றும் எழுகின்ற இசை. பசை நறவு—பசிய தேன். விளைகட்டி—கருப்பஞ்சாற்றில் உண்டாகின்ற பாகுக் கட்டி, இன்—ஒவ்வொன்றும் ஒப்புப் பொருள். இந்த நான்கையும் போல, மதுரித்து எழு கிளவி—அமுதம், இசை, நறவு, கட்டி இதற்றின் மதுரம் ஒருமிக்க அமைந்து, அச்சுவை வரவரக் கூடிவருகின்ற சொற்களையுடைய சீதா பிராட்டி. கிளர் விழிபோல்—அஞ்சம்பையும் அலகம்பையும் வென்று நஞ்சங் களை வெல்லக் கிளரா நின்ற விழிகளைப் போன்று. களை பிடுங்கியவர் வயலினின்றும் விட்டு எறிந்த குவளை மலர்க் கூட்டங்களைக் கண்டான். தளை—வரம்பு; இங்கு வயல்.

81, பல் நந்துகள் தரளம் தொகு நன்னீர்—பல சங்குகள் முத்துக்களைத் தொகுப்பதற்கு இடனான நன்னீர். படர் பங்கயம் நன்னீர்-படர்ந்த தாமரைக் கொடிகளையுடைய நன்னீர். இத்தகைய நீர் நிலைகளைக் கொண்ட சோலை. அன்னங்கள் துயில்கின்ற சோலை. அயல் நந்து உறை புளினம்—பக்கங்களில் சங்குகள் தங்கப்பெற்ற மணல் மேடுகள். சின்னம் தரு மலர்—விடுபூவாக அணிதற்குரிய பூக்கள். செறி—அடர்ந்த. பொன் உந்திய நதி—பொன்னைக் கொழிக்கின்ற நதி; தேவசுருதி, கோமதி முதலிய நதிகள். சோலைகளையும், புளினங்களையும், நதிகளையுங் கண்டு மகிழ்தந்தனராகிப் போனார்.

சின்னந்தரு மலர்சிந்திய செறிநந்தன வனநன்
பொன்னுந்திய நதிகண்டுள மகிழ்தந்தனர் போனர். 6

82 கால்பாய்வன முதுமேதிகள் கதிர்மேய்வன கடைவாய்
பால்பாய்வன நறைபாய்வன மலர்வாயளி படரச்
சேல்பாய்வன கயல்பாய்வன செங்கான்மட வன்னம்
போல்பாய்புனல் மடவார்படி நெடுநாடவை போனர். 7

---

'பன்னங்துகு தரளந் தொகு படர் பந்துக்கள் படுநீர்' என்ற பாடத்திற்கு 'பல சங்குகள் உகுத்த முத்துக்கள் குவிந்துள்ள படர்ந்த முத்துப் பந்துபோன்ற நத்தையின் முட்டைகளையுடைய நீர்நிலை' என்று பொருள் கொள்க.

82. கால்களாற் பாய்வனவாகிய முதிய எருமைகள். பால்—மேய்ந்த மணிபிடியாத அந்நெற் கதிர்களின் பால். அந்தப் பால் பாய்கின்ற புனல் நாடு. நறை பாய்வன மலர்—தேனொழுகும் மலர். அம்மலரின் கண்ணே யுள்ள வண்டுகள் பறந்து வேறிடஞ் செல்லும்படி சேலும் கயலும் துள் ளிப் பாய்வதற்குக் காரணமாகிய நீர் நாடு: மடவார் அன்னம் போற் படி பாய் புனல் நாடு. படி—படியும்: நீராடும். இந்த நீர் நிலைகளின் அழகைப் பார்த்த வண்ணம் கோசல நாட்டைக் கடந்து சென்றனர்.

## 20. இராமபிரான் குகனோடு தோழமை கொண்டது.

மருதநிலக் காட்சிகளைக் கண்டு களித்த வண்ணம் மூவரும் கங்கைக் கரையை யடைய ஆண்டுறைந்த தவமுனிவர்கள் அவர்களை எதிர்கொண்டு தம்மிருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றனர். கங்கையில் நீராடி விருந்தயர்ந்திருந்த பொழுது ஆயிரம் படகுகளையுடைய வேடர் தலைவனாகிய குகன் இராம பிரானைக் காண வந்தனன். அவன் வந்தது முதல் இராமபிரான் சித்திரகூடமலையை நோக்கிப் புறப்பட்டது வரை நிகழ்ந்த வரலாறு இப் பகுதியிற் கூறப்படுகின்றது.

அன்பினனாகி, இருந்த வள்ளலைக் காணவந்த நாவாய் வேட்டுவன், ஈற்றில் "என் உயிர் அனையாய் நீ...; இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம்" என்று இராமபிரான் தன் வாயினாற் கூறும்படி அவனது இன்னுயிர்த் துணைவனானன். அன்புணர்ச்சி குகன் மாட்டு உயிரீயும் பக்தியாகவும், இராமபிரான் மாட்டு அவன் தொழிலுரிமையில் நிற்கும் அருளாகவும் ஒரு சிறு கால

எல்லையில் முதிர்ந்து வெளிப்பட்ட படிகளை ஆசிரியர் செவ்விய முறையிற் காட்டுகின்றார். அன்பினன்; உள்ளந்தூயவன்; தாயின் நல்லானாகி வந்தவன், வருக என்னனும் பரிவினனாகி விரைவிற் புக்கு வணங்கி நின்றான். இருந்தி ஈண்டு என்னனும் இருந்திலன் எல்லை நீத்த அருத்தியன். "தேனும் மீனும் விருந்தினுக் கமைவதாகத் திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம்?" என்றான். அதனைக் கொணர்தற்குக் காரணமான உள்ளத்தன்பினால் அமைந்த காதலை உணர்ந்த வள்ளல், "அஃது அமிர்தினும் சீர்த்தது" என்றான். பின்பு இராமபிரான், "நாவாயோடும் சாருதி விடிய" என்றான். இராமபிரானது திருமேனி அழகில் ஈடுபட்டுப் பெருகிய காதலையுடைய குகன், "நின் இன்னலின் இருக்கை நோக்கிப் பிரிகலென்: செய்குவென் அடிமை" என்றான். தீராக் காதலனாகும் என்றுணர்ந்து, கருணையின் மலர்ந்த கண்ணனின் ஆணைப்படி திருநகர் தீர்ந்த வண்ணம் தம்பிகூற, அது கேட்ட வேடர் தலைவன் ஆற்றொணாத் துயருற்று வருந்தினான்; கதிரவனும் மறைந்தான். இரவு முழுவதும் இலக்குவனைப் போலவே தொடுத்த வில்லோடும் வெய்துயிர்ப்போடும் இமைப்பிலன் காவல் புரிந்தான். அடுத்த நாள் காலையில் இராமன், "ஐய, நாவாய் கொணருதி விரைவின்" என்றான்; அது கேட்ட குகன் அப்பெருமானை, தேவியொடு அடிதாழ்ந்து, "யாங்கள் ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய இனிதிரு நெடிதெம்மூர்" என்று இரந்தனன். இச்சொற்கேட்டலும் அருள் வெள்ளம் நெஞ்சு நிறைந்த இராமபிரான், "புனிதரை வழிபாடுற்று எண்ணிய சில நாளிற் குறுகுதும்" என்று பணித்தனன். அடியவனும் நாவாய் கொணர்ந்தனன். மறு கரை யடைந்ததும். "சித்திர கூடத்துக்குச் செல்லும் நெறி யாது?" என இராகவன் வினவ, பத்தியின் உயிரீயும் பரிவினனாகிய குகன், "மருவலர் உளரென்னின் முன்னே மாள்குவன்; ஒரு நொடி வரை உம்மைப் பிரிகலென்; போதுவன் உடன்" என்று அடிபணிந்தனன். பிரிவினால் விம்மி அழுகின்ற குழவியின் துயரை ஆற்ற முயலும் தாயைப்போல, தன்னையே தமர்க்கு நல்கும் தனிப்பெருந்தகை வள்ளலும், "மாழைமான் மட நோக்கி உன்தோழி; உம்பி எம்பி; என்னுயிரனையாய் நீ; நளிர் கடல் நில மெல்லாம் நின்

னுடையது; நானும் தொழிலுரிமையினுள்ளேன்; வடதிசை வரும் அந்நாள் நின்னுழை வருகின்றேன்; உறு துயர் உறலாமோ?" என்று அரிதின் முயன்று சமாதானப் படுத்தினான். பிரிவெனுந் துயருருவு கொண்டாலன்ன குகனும் பருவரலோடு விடை கொண்டான். மற்றொரு வேடர்குலத் தலைவராகிய கண்ணிடந் தப்பிய அண்ணலைப் போலவே குகனும் 'குறிக்கொள் ஞானங்களால் எனையூழி செய்தவமும் கிழிக்கொண்டு இப்பிறப்பே சில நாளில்' எய்தினன்.

அற்றம் நீத்த மனத்தினன், ஆராத காதலனாகிய குகன் பேசும் பேச்சின் சீரிய பண்பாடும் யாவரையும் பிணிக்கும் அன்பின் வலிமையும் இப் பகுதியில் அமைவுற்ற பண்பு உய்த்துணரற் பாலது.

[தெ. ப:— கங்கைப் படலம்: 36–55, 57–61; 63–64; 67–72.]

83 சிருங்கி பேர மெனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்று நகருறை வாழ்க்கையன்
ஒருங்கு தேனொடு மீனுப காரத்தன்
இருந்த வள்ளலைக் காணவந் தெய்தினான். 1

84 சுற்ற மப்புற நிற்கச் சுடுகணை
விற்று றந்தரை வீக்கிய வாளொழித்து
அற்றம் நீத்த மனத்தினன் அன்பினன்
நற்ற வப்பள்ளி வாயிலை நண்ணினான். 2

---

83. மருங்கு—பக்கத்திலே. ஒருங்கு தேனொடு மீன் உபகாரத்தன்—ஒன்றாய்ப் பக்குவஞ் செய்யப்பட்ட தேனும் மீனும் காணிக்கையாகக் கொணர்ந்தவன்.

84. வில் துறந்து. அரை வீக்கிய—இடுப்பிலே கட்டிய. அற்றம்—சோர்வு; அன்றி, சமயம். இராமபிரானைக் காண்பதற்கு இது சமயம், இது சமயமன்று என்று ஆராய்தலை நீக்கிய மனத்தினனாகி. அதற்குக் காரணம்:—அன்பினன்—இராமபிரானைக் காணவேண்டுமென்னும் ஆர்வ மிகுதியினாலே சமயம் கிடைக்குமட்டும் ஆறியிருக்கப் பொறாத பேரன்பினனாகிய குகன். நல் தவம் பள்ளி. நண்ணினான்—கிட்டினான்.

85 கூவா முன்னம் இளையோன் குறுகிநீ
யாவான் யாரென அன்பின் இறைஞ்சினான்
தேவா நின்கழல் சேவிக்க வந்தனன்
நாவாய் வேட்டுவன் நாயடி யேனென்றான். 3

## வேறு

86 நிற்றியீண் டென்று புக்கு நெடியவற் றொழுது தம்பி
கொற்றவ நின்னைக் காணக் குறுகினன் நிமிர்ந்த கூட்டச்
சுற்றமுந் தானும் உள்ளந் தூயவன் தாயின் நல்லான்
எற்றுநீர்க் கங்கை நாவாய்க் கிறைகுகன் ஒருவன் என்றான். 4

87 அண்ணலும் விரும்பி யென்பால் அழைத்திநீ அவனை என்றான்
பண்ணவன் வருக என்னப் பரிவினன் விரைவிற் புக்கான்
கண்ணனைக் கண்ணின் நோக்கிக் கனிந்தனன் இருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து மேனி வளைத்துவாய் புதைத்து நின்றான். 5

---

85. நீ யாவான் யார்—இந்த நற்றவச் சாலையில் இந்நேரத்தில் அணுகி இப்படிக் கூவுகின்ற நீ யாவன்? அன்பின் இறைஞ்சினான்—அன்புணர்ச்சி தலையெடுத்து வணங்கினான். தேவா! நின் கழல் சேவிக்க வந்தனன்—இராமன் பால் வைத்த மெய்யன்பு அவனைச் சேர்ந்தவனிடமும் பல்கி இங்ஙனம் விடை கூறினான்; கல்வியினாலோ நாகரிகப் பழக்கத்தினாலோ அன்று. நாவாய் வேட்டுவன்—தோணி செலுத்தும் வேடன். நாய் அடியேன்—நாயனைய விட்டு நீங்கப் பொறாத அன்புள்ள உனதடிமையாகிய யான்: கடைப்பட்டவன்.

86. ஈண்டு நிற்றி—இங்கே இரு. நெடியவன் தொழுது—இராமபிரானை வணங்கி. குறுகினன்—சமீபத்தில் வந்துள்ளான். நிமிர்ந்த—பெரிய. தாயின் நல்லான்—தாய் போன்று அன்புள்ளவன். எற்று—அலைகள் மோதுகின்ற. நாவாய்—படகு. குகன் ஒருவன்—சுற்றம் அப்புறம் நிற்கத் தான் தனியே வந்துள்ள குகன்.

87. பண்ணவன்—தேவன்: ஈண்டு இலக்குமணன். பரிவினன்—பரிவினனாகி. வரும்போது அன்பினன்; வருக என்று கூறக் கேட்டதும் அன்பு மிக்கது. கனிந்தனன்—இராமனைக் கண்டதும் அவன் திரு மேனி அழகில் ஈடுபட்ட குகன் மனம் கனிந்தது: அன்பு மலர்ந்து கனிந்தது. 'இருண்ட...... நின்றான்'. (அயோத்தி: 38.)

88 இருந்தியீண் டென்ன லோடு மிருந்திலன் எல்லை நீந்த
அருத்தியன் தேனும் மீனும் அமுதினுக் கமைந்த வாகத்
திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் திருவுள மென்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான். 6

89 அரியதா முவப்ப உள்ளத் தன்பினு லமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த வென்றால் அமிர்தினும் சீர்த்த வன்றே
பரிவினில் தழீஇய எம்மிற் பவித்திரம் எம்ம னோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டன மன்றோ என்றான். 7

90 சிங்கவே றனைய வீரன் பின்னருஞ் செப்பு வான்யாம்
இங்குறைந் தெறிநீர்க் கங்கை ஏறுதும் நாளை யாணர்ப்
பொங்குநின் சுற்றத் தோடும் போயுவந் தினிதுன் னூரில்
தங்கிநீ நாவா யோடுஞ் சாருதி விடிய என்றான். 8

91 கார்குலாம் நிறத்தான் கூறக் காதலன் உணர்ந்து வானிப்
பார்குலாஞ் செல்வ நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை

---

88. இருந்திலன்—இராமபிரான் முன்னிலையில் இருந்திலன். எல்லை நீத்த அருத்தியன்—அளவில்லாத ஆசையை யுடையவன்: அன்பு பரிவாகி, கனிவுற்று, இராமன் வாய்மொழி கேட்டதும் மேன்மேலும் ஆசை வளர்ந்தது; கரை காணுக் கடல் போற் பெருகிற்று. திருத்தினன் கொணர்ந்தேன்—கண்ணப்ப நாயனர் எல்லை நீத்த அன்பினுலே பதம் பார்த்துக் கொணர்ந்தது போல இவனும் தேனையும் மீனையும் வேறுபாடு தோன்றுதவாறு ஒருங்கிக் கொணர்ந்தான். வீரன்—இராமன். விருத்த மாதவர்—முதியவரான முனிவர்கள்: பெரிய தவ முதல்வர்.

89. அரியதாம்—கிடைத்தற்கரியதாம். உவப்ப—யாம் மகிழும்படி. உள்ளத்து அன்பினுல் அமைந்த காதல் தெரிதர—இதயத்தில் இயல்பாயமைந்த அன்பு நிறைந்து காதலாகி, அக்காதல் கண்ணுலே காண்பது போன்று தெரியும்படி (கொணர்ந்த.) பரிவு—மிக்க அன்பு: விசுவாசம். தழீஇய எம்மில்—தழுவிய எமக்கு. பவித்திரம்—தூய்மையானது. எம்மனோர்க்கும் உரியன—எம்மை யொத்த யாவரும் அங்கீகரிக்கத் தக்கன. நாம்—முனிவரையும் உளப்படுத்திய தன்மைப் பன்மை. உண்ணுவிடினும் உண்டதாகக் கூறியது குகனைத் திருத்திப்படுத்தும் பொருட்டு.

90. சிங்க ஏறு—ஆண் சிங்கம். கங்கை ஏறுதும் நாளை—நாளைய தினம் கங்கையைக் கடப்போம். யாணர்—புதிய வருவாய். சாருதி—வருவாய்.

91. கார் குலாம் நிறத்தான்—மேகம் போன்று விளங்குகின்ற நிறத்தான்: இராமன் கூறும்பொழுது பார்த்த குகன் அவனது மேனியழகில் ஈடுபட்டதை உணர்த்திற்று. குலாம்—குலாவும். காதலன்—அன்பினனுகி வந்த

ஈர்கிலாக் கள்வ னேன்யான் இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன் நான தைய செய்குவென் அடிமை என்றான். 9

92 கோதைவிற் குரிசி லன்னான் கூறிய கொள்கை கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி திருமுக நோக்கித் தீராக்
காதல னாகு மென்று கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினு மினிய நண்ப இருத்தியீண் டெம்மோ டென்றான். 10

93 திருநகர் தீர்ந்த வண்ணம் மானவ தெரித்தி யென்னப்
பருவரல் தம்பி கூறப் பரிந்தவன் பையு ளெய்தி
இருகணீர் அருவி சோரக் குகனுமாண் டிருந்தான் என்னே
பெருநிலக் கிழத்தி நோற்றும் பெற்றிலள் போலு மென்னா. 11

---

வன். அன்பு பரிவாகிப் பின்பு கனிந்து காதலாக உருக்கொண்டுவிட்டது: தீராக் காதலனாகி அந்தப் பேரன்பின் பண்பு படும்படி கூறுவான். இப்பார் குலாம் செல்வ—இவ்வுலகம் முழுவதும் கண்டதும் மகிழ்ச்சி பூக்கும் படியான செல்வனே! ஈர்கிலாக் கள்வனேன் யான்—கண்ணப்ப நாயனார் செய்தது போன்று, தானும் செய்ய விரும்புகின்றான் ஒத்த அன்பினனாகிய இவ்வேடர் தலைவன். இன்னலின் இருக்கை நோக்கித் தீர்கிலேன்—உலகமெலாம் மகிழும் படியான நீ இத் துன்ப நிலையிலிருப்பதைக் கண்டு வைத்து உன்னைப் பிரிய மனமில்லேனாயினேன். தீர்தல்—நீங்குதல். அது—அவன் பெருமையையும் தன் சிறுமையையும் எண்ணித் தன் மனோரதத்தைக் கூறுவதற்குச் சற்றுத் தயங்குகின்றான்.

92. கோதை—வில்லாளர் அம்பெய்யும் பொழுது கையில் கட்டிக் கொள்ளும் உறை: 'கோதா' என்ற வடமொழியின் திரிபு. கோதையையும் வில்லையுமுடைய குரிசில். அன்னான்-குகன். தீராக்காதலன்-நீங்கத் தரியாத காதலன். யாதினும் இனிய நண்ப—குகனது அன்பு படிப்படியே வளர்ந்தது போலவே இராமபிரான் அவன் மேற்கொண்ட அன்பும் வளரலாயிற்று; இப் பொழுது கருணையின் மலர்ந்த கண்ணன். முன்பு உள்ளத் தன்பினால் அமைந்த காதலன் இப்பொழுது தீராக்காதலன் என்று உட்கொண்டு யாதினு மினிய நண்பனாயினான். இங்ஙனம் அன்பு இரண்டு தலையிலும் வளர்வதாயிற்று; குகனிடம் பக்தியாகவும் இராமனிடம் கருணையாகவும் பெருகிற்று.

93. தீர்ந்த வண்ணம்—நீங்கிய விதம்: அந்த வரலாறு. மானவ—மனுவின் குலத் தோன்றலே! தெரித்தி—தெரியக் கூறுவாய். பருவரல்-துன்பம். முடி துறந்து நகர் நீங்கிய துன்பத்தை இன்னும் மறவாத தம்பி: அன்றி, துன்பமே உருவெடுத்தாற் போன்ற அந்த வரலாற்றை. பரிந்தவன்—குகன்: இராமபிரானிடம் அன்புமிக்க குகன். பையுள்—துன்பம். இரு கண்ணீர் என்பதன் விகாரம். 'என்னே.........போலும்':— வரலாற்று முடிவில் குகன் தனக்குள்ளே சிந்தித்தது. போலும்—அசை. உலகியல் எவ்வளவு நூதனம்! பூமிதேவி இராமன் அவதரிக்கத் தவஞ் செய்திருந்தும் அவன் ஆட்சி செய்யும் மகிழ்ச்சியை அனுபவிக்கப் பெற்றிலளே!

94 விரியிருட் பகையை ஓட்டித் திசைகளை வென்று மேல்நின்று
ஒருதனித் திகிரி யுந்தி உயர்புகழ் நிறுவி நாளும்
இருநிலத் தெவர்க்கும் உள்ளத் திருந்தன னென்ன வீய்ந்த
செருவலி வீரன் என்னச் செங்கதிர்ச் செல்வன் சென்றான். 12

95 மாலைவாய் நியமஞ் செய்து மரபுளி இயற்றி வைகல்
வேலைவாய் அமுதன் னாளும் வீரனும் விரித்த நாணல்
பாலவாம் பாரின் பாயல் வைகினன் வரிவி லேந்திக்
காலைவா யளவுந் தம்பி இமைப்பிலன் காத்து நின்றான். 13

96 தும்பியின் குழாத்திற் சுற்றுஞ் சுற்றத்தன் தொடுத்த
வில்லன்
வெம்பிவெந் தழியா நின்ற நெஞ்சினன் விழித்த கண்ணன்
தம்பிநின் றானை நோக்கித் தலைமகன் தன்மை நோக்கி
அம்பியின் தலைவன் கண்ணீர் அருவிசோர் குன்றின்
நின்றான். 14

---

94. இச்செய்யுள் சூரியாஸ்தமன வருணனை; இந்த வரலாறு கேட்ட குகனுடைய சிந்தனை, கதை நிகழ்ச்சி இவற்றோடு தொடர்புற்றுக் காணப் படுகின்றது. முதல் மூன்று அடிகள் சூரியனுக்கும் தயரதனுக்கும் சிலேடை. விரி இருள் பகையை ஓட்டி—1. விரிந்த இருளாகிய தன் பகையை ஓடச் செய்து: 2 எங்கும் பரந்த இருள் போன்று துன்பஞ் செய்கின்ற பகைவரை அழித்து. திசைகளை வென்று—1. எல்லாத் திசைகளிலும் தன் ஒளியைப் பரப்பி வெற்றிகொண்டு: 2. திக்குவிசயம் செய்து. மேல்நின்று–1. ஆகா யத்திலே நின்று: 2. எல்லா அரசர்க்குந் தலைவனாக இருந்து உச்சநிலை எய்தி. ஒரு தனித் திகிரி உந்தி–1. தனியாழி பூண்ட தேரைச்செலுத்தி: 2. தனக்கே உரிய ஒப்பற்ற ஆஞ்ஞா சக்கரத்தை இருந்த இடத்திலிருந்தே உலகெங்குஞ் செலுத்தி. உயர் புகழ் நிறுவி—1. மேலான புகழைத் தன் குலத் தோன்றல் களுக்கு நிலைபெறச் செய்து: 2. முந்திய அரசர் யாவரும் அடையாத பெரும் புகழை நிறுத்தி. இரு நிலத்து எவர்க்கும் உள்ளத்திருந்தனன் என்ன:— 1. பெரிய உலகில் யாவராலும் தியானிக்கப்பட்டவன் என்னும் படி. 2. உலகில் யாவர் மனத்திலும் தன் பெயர் நிற்கும்படி செய்தான் என்று கூறும்படி. வீய்ந்த செருவலி வீரன் என்ன—போர்க் களத்திலே வீரத் தோடு போர் செய்தது போலவே வாய்மையின் பொருட்டு வீரமரணம் எய்திய தயரதனைப் போல. சூரியன் அத்தமித்தான்.

95. மாலைவாய்-மாலைக் காலத்தில். நியமம் சந்தியாவந்தனம் முதலிய வற்றை. மரபுளி—முறைப்படி: உளி—இடைச் சொல். இயற்றி—செய்து; செவ்வனே செய்து. வேலைவாய் அமுதன்னாள்—கடலின் கண்ணே தோன்றிய அமுதம் போன்றவள்; சீதை. மாலை—ஒழுங்கு. பாயல்—படுக்கை.

96. தும்பியின் குழாம்—யானைக் கூட்டம். வெம்பி—கொதித்து. வெந்து—புழுங்கி. அழியா நின்ற நெஞ்சினன்—சிதைந்த மனத்தினனாகிய. அம்பி—தோணி. தலைவன்—குகன். குன்றின்—குன்றைப் போல. இங்ஙனம் அவன் வருந்தக் காரணம் முன்பு மெல்லணைமேற் கண்துயின்றவன் இன்று புல்லணைமேற் கண்துயிலக் கண்டமை.

97 துறக்கமே முதல வாய தூயன யாவை யேனும்
மறக்குமா றினைய லம்மா வரம்பில தோற்று மாக்கள்
இறக்குமா றிதுவென் பான்போன் முன்னைநா ளிறந்தான் பின்னுள்
பிறக்குமா றிதுவென் பான்போற் பிறந்தனன் பிறவா வெய்யோன். 15

98 செஞ்சவே சேற்றிற் றோன்றுந் தாமரை தேரிற் றோன்றும்
வெஞ்சுடர்ச் செல்வன் மேனி நோக்கின விரிந்த வேறோர்
அஞ்சன ஞாயி றன்ன ஐயனை நோக்கிச் செய்ய
வஞ்சிவாழ் வதன மென்னுந் தாமரை மலர்ந்த தன்றே. 16

99 நாண்முதற் கமைந்த யாவும் நயந்தன னியற்றி நாமத்
தோண்முதற் கமைந்த வில்லான் மறையவர் தொடரப் போனான்
ஆண்முதற் கமைந்த கேண்மை யன்பனை நோக்கி ஐய
கோண்முதற் கமைந்த நாவாய் கொணருதி விரைவின் என்றான். 17

---

97. துறக்கம்—சுவர்க்கம். சுவர்க்கம் முதலிய பரிசுத்தமான பதவிகள் எவையாயினும் அவற்றை மறக்கும்படி, வீடு பேற்றையே விரும்பும் வண்ணம் நெஞ்சிலே நினைக: ஏனெனில் ஏனையவெல்லாம் பிறவிக்கு ஏது. கணக்கில்லாமல் காணப்படும் மக்கள் மரணமடைவது போல முந்திய நாள் சூரியன் மறைந்தான்; அவர்கள் மறுபடி பிறப்பது இங்ஙனம் என்று ஞாபகப்படுத்துவது போல் இன்று மறுபடி உதித்தான். பிறவா வெய்யோன்—பிறப்பாலாம் இன்பதுன்பங்களை அனுபவியாத சூரியன். தோற்றும்—காணப்படும்.

98. செஞ்சவே—நன்றாக; விரிந்த என்பதனோடு முடிந்தது. தேரில் தோன்றும் வெம் சுடர்ச் செல்வன்—சூரியன். சேற்றிலே தோன்றிய தாமரை சூரியனை நோக்கிச் செவ்வனே விரிந்தன. அஞ்சன ஞாயிறு—கருநிறமுள்ள சூரியன். ஐயன்—இராமன். செய்ய வஞ்சி—அழகிய வஞ்சிக் கொடி போன்ற சீதா பிராட்டியினது. வாழ் வதனம்—பொலிவமைந்த முகம். சீதை துயிலெழுந்ததும் இராமபிரானைத் தரிசித்து மகிழ்ச்சியுற்றாள்.

99. நாள் முதற்கு அமைந்த—உதய காலத்திற் செய்யும் நியமம் முதலியன. நயந்தனன்—விரும்பி. நாமம்—அச்சம். ஆள் முதற்கு அமைந்த கேண்மை அன்பன்—இராமபிரான் பொருட்டு எத்தகைய அடிமையும் செய்தற்கு மனம் பொருந்திய உரிமைபெற்ற அன்பனாகிய குகனை. கோள் முதற்கு—கொண்டு செல்லுதற்கு.

## வேறு

100 ஏவிய மொழிகேளா விழிபுனல் பொழிகண்ணன்
ஆவியு முலைகின்றன் அடியிணை பிரிகல்லான்
காவியின் மலர்காயாக் கடன்மழை யனையானைத்
தேவியோ டடிதாழாச் சிந்தனை உரைசெய்வான். 18

101 பொய்ம்முறை இலரேமெம் புகலிடம் வனமேயால்
கொய்ம்முறை யுறுதாராய் குறையிலம் வலியேமால்
செய்ம்முறை குற்றேவல் செய்குதும் அடியோமை
இம்முறை உறவென்ன இனிதிரு நெடிதெம்மூர். 19

102 தேனுள தினையுண்டால் தேவரு நுகர்தற்காம்
ஊனுள துணைநாயேம் உயிருள விளையாடக்
கானுள புனலாடக் கங்கையு முளதன்றே
நானுள தனையும்நீ இனிதிரு நெடிதெம்பால். 20

---

100. இழிபுனல்—வழிகின்ற கண்ணீர். கண்ணன்—குகன். காவி—கருங்குவளை. காயா—காயாம்பூ. மழை—மேகம். முன்பு கார்குலாம் நிறத்தானைக் கண்டு அனுபவித்தான்; இப்பொழுது அன்பு வளர்ந்த நிலையில் காயா, கடல், மழை—இவற்றைப் போல இருப்பதைக் கண்டு ஈடுபட்டான். (பால: 108.)

101. பொய்யின் வழி ஒழுகும் முறைமையை அறியோம்: அதற்குக் காரணம் புகலிடம் வன மாதலே. புகலிடம்—வசிக்கு மிடம். நகரப் பழக்க மற்றவரானபடியால் கைகேயியைப்போன்று வஞ்சனை இயற்றேம். கொய்முறை உறுதாராய்—கொய்து ஒழுங்காக அமைக்கப்பட்ட மாலையை யுடையவனே! குறைவிலம்—மேலும் பொய்ம்முறையை மேற் கொள்ளுதற்கு எவ்வித மனக்குறைவு முடையோமல்லோம். வலியேம்—அப் பொய்ம்முறை ஈண்டுந் தொடர்ந்து வரின், அதனை அழித்தற் கேற்ற படை வலிமையுடையோம். செய்ம்முறை—அடிமை செய்யும் முறைமையறிந்து; இம்முறை உறவு என்ன-நீ ஆண்டான் நாங்கள் அடிமை என்னும் உறவு முறையிலே. 'உன் தன்னோடு உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்று கூறினன். (திருப்பாவை: 29.)

102. ஊன்—மாமிசம் என்னும் பொருளன்று; வேடர்கள் மொழியில் 'உணவு' என்னும் பொருள்படப் பேசுகின்றன். அரக்கியாகிய சூர்ப்பநகையும், 'தூப்போலச் சுவையுடைய கனிபலவுந் தரவல்லேன்' என்றுள். (ஆரணிய:56.)

103 ஐயிரு பத்தோடைந் தாயிர ருளராணை
செய்குநர் சிலைவேடர் தேவரின் வலியாரால்
உய்குது மடியேமெங் குடிலிடை ஒருநாள் நீ
வைகுதி யெனின்மேலோர் வாழ்விலை பிறிதென்றான். 21

104 அண்ணலும் அதுகேளா அகநிறை அருள்மிக்கான்
வெண்ணிற நகைசெய்தான் வீரநின் னுழையாமப்
புண்ணிய நதியாடிப் புனிதரை வழிபாடுற்று
எண்ணிய சிலநாளிற் குறுகுது மினிதென்றான். 22

105 சிந்தனை யுணர்கிற்பான் சென்றனன் விரைவோடும்
தந்தனன் நெடுநாவாய் தாமரை நயனத்தான்
அந்தணர் தமையெல்லாம் அருளுதிர் விடையென்னா
இந்துவின் நுதலாளோடு இளவலொடு இனிதேறா. 23

106 விடுநதி கடிதென்றான் மெய்யுயி ரனையானும்
முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்

---

103. 'இனிதிரு நெடி தெம்பால்' என்றவன் இராமபிரான் முகக் குறிப்பினாலோ, அன்றி அப்பிரான் உள்ளநிலை அன்பினாகிய குகன் இதயத்திலும் எய்தலாலோ அவன் மனநிலையை உணர்ந்து, அது சாத்தியமின்றேல் ஒரு நாளாவது தன் குடிசையில் தங்கிச் செல்லுமாறு கூறுகின்றான். 'எக்காலத் தெந்தையாய் என்னுள் மன்னில் மற்றெக் காலத்திலும் யாதொன்றும் வேண்டேன்' என்பது போன்று கூறுகின்றான். (திருவாய்மொழி: ௨: 9: 8.) ஐந்நூறாயிரவர். உய்குதும்—ஈடேறி விடுவோம்.

104. அகம் நிறை அருள் மிக்கான்—முன்பு 'செய்குவென் அடிமை' என்பதைக் கேட்டுக் கருணையின் மலர்ந்த கண்ணனாகிய இராமபிரான் இப்பொழுது குகன் சொன்னதைக் கேட்டான்; நெஞ்சு முழுவதும் அருள் நிறைந்து அதன் எல்லையையுங் கடந்து வெண்ணிற நகையாக வழிந்தது; அவனுடைய அருள் வளர்ந்தபடி. நின்னுழை—உன்னிடம். எண்ணிய—குறிப்பிட்ட.

105. சிந்தனை உணர்கிற்பான்—குகன்; தன் வேண்டுகோளை மறுப்பினும் தன் மாட்டுக் கருணை பெருகிய தன்மையை உணர்ந்தான். இந்துவின் நுதலாள்—சந்திரனைப் போன்ற நெற்றியையுடைய சீதா பிராட்டி.

106. கடிது விடு. மெய் உயிர் அனையான்—குகன்: இராமன் மெய்: குகன் உயிர்: இவ்வடை மொழி இராமபிரான் அப்பொழுது குகனைப் பற்றிச் சிந்தித்ததை உட்கொண்டு கூறப்பட்டது: பின் 'என்னுயிர் அனையாய் நீ'

கடிதினின் மடவன்னக் கதியது செலநின்ருர்
இடரறு மறையோரும் எரியுறு மெழுகானர். 24

107 பாலுடை மொழியாளும் பகலவ னனையானும்
சேலுடை நெடுநன்னீர் சிந்தினர் விளையாடத்
தோலுடை நிமிர்கோலிற் றுழவிட எழுநாவாய்
காலுடை நெடுஞெண்டிற் சென்றது கடிதம்மா. 25

108 அத்திசை யுற்றையன் அன்பனை முகநோக்கிச்
சித்திர கூடத்திற் செல்நெறி பகரென்னப்
பத்தியி னுயிரீயும் பரிவினன் அடிதாழா
உத்தம அடிநாயேன் ஓதுவ துளதென்ருன். 26

109 நெறியிடு நெறிவல்லேன் நேடினன் வழுவாமல்
நறியன கனிகாயும் நறவிவை தரவல்லேன்
உறைவிடம் அமைவிப்பேன் ஒருநொடி வரையும்மைப்
பிறியலென் உடனேகப் பெறுகுவெ னெனின்நாயேன். 27

---

என வருதல் காண்க: தம்பி என்று கூறியதற்கு முந்திய மனநிலை. முடுகினன்—விரைவாகச் செலுத்தினன். முரி திரை—மறிந்து விழுகின்ற அலைகளினூடே. இடர் அறு மறையோர்—இயல்பாகவே துன்பத்தின் நீங்கிய முனிவர். நாவாய் செல்ல, கரையிலே நின்ருராகிய மறையோரும் எரியுறு மெழுகானர்.

107. பகலவன்—சூரியன். சேல்—கயல்மீன். தோலுடை நிமிர் கோல்—கைப்பிடிப்பில் தோற்கட்டமைந்த நீண்ட துடுப்பு. துழவிட—நீரின் மேற் பரப்பைத் துழாவ. ஞெண்டு—நண்டு.

108. அன்பனை—நண்பன். பத்தியின் உயிர் ஈயும் பரிவினன்—இராமன் மேல் நிமிர்ந்த காதலினுல் அவன் பொருட்டுத் தன்னுயிரையும் கொடுக்கத் துடிக்கின்ற பேரன்புடையவன்: அன்பனுக்கும் தம்பிக்கும் இடைப்பட்ட படி. சித்திரகூடம்:—பல நிறங்களால் அழகு பெற்ற சிகரங்களை யுடையது.

109. நெறிவல்லேன்-முன்னமே அடிப்பட்ட வழிகளையெல்லாம் காட்ட வல்லேன்: இடு நெறி வல்லேன்—பழைய பாதை இல்லாவிடங்களிலும் காடு கெடுத்துப் புது வழி அமைக்க வல்லேன். நேடினன்—தேடி. வழுவாமல்—ஒரு பொழுதும் தவருமல். நறவு—தேன். ஒரு கணமேனும் உங்களைப் பிரிந்து வாழ மாட்டாதேன். நாயேன் உடனேகப் பெறுகுவனெனின் வல்லேன்.........வல்லேன்.

110 திருவுள மெனின்மற்றென் சேனையு முடனேகொண்டு
ஒருவல னொருபோது முறைகுவன் உளரானோர்
மருவல ரெனின்முன்னே மாள்குவன் அழிகல்லேன்
பொருவரு மணிமார்பா போதுவ னுடனென்றான். 28

111 அன்னவ னுரைகேளா அமலனும் உரைநேர்வான்
என்னுயி ரனையாய்நீ இளவலுன் இளையான்இந்
நன்னுத லவள்நின்கேள் நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடை யதுநானுன் தொழிலுரி மையினுள்ளேன். 29

112 துன்புள தெனினன்றோ சுகமுள ததுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுள தெனவுன்னேல்
முன்புளம் ஒருநால்வேம் முடிவுள தெனவுன்னா
அன்புள இனிநாமோர் ஐவர்கள் உளரானோம். 30

113 படருற உளனும்பி கானுறை பகலெல்லாம்
இடருறு தகையாயோ யானென உரியாய்நீ
சுடருறு வடிவேலாய் சொன்முறை கடவேல்யான்
வடதிசை வருமந்நாள் நின்னுழை வருகின்றேன். 31

---

110. ஒரு போதும் ஒருவலன்—ஒரு கணமும் பிரியேனாகி. உளரானோர் மருவலரெனின்—அங்குள்ளவர் யாவரேனும் பகைவர்களென்னின். முன்னே மாள்குவன்—சுமித்திரை இலக்குவற்குச் சொன்ன வார்த்தையைக் கூறுகின்றான். *(அயோத்தி: 60.)* அழிகல்லேன்—மனமழிய மாட்டேன். பொரு—ஒப்பு.

111. உரை நேர்வான்—விடை கூறுவான்: 'நேர்வான்' என்றமையால் குகனது பக்தி நிலைக்கு ஏற்றவாறு ஆராய்ந்து கூறுவான் என்பது குறிப்பு. என் உயிர் அனையாய் நீ—'தோழன் நீ'. இளவல் உன் இளையான்—'உம்பி எம்பி'. இந் நன்னுதலவள் நின் கேள்—'மாழை மான் மட நோக்கி உன் தோழி'. (பெரிய திருமொழி: 5: 8: 1.) நளிர் கடல் நிலமெல்லாம் உன்னுடையது; நான் உன் தொழிலுரிமையினுள்ளேன்—நீ இட்ட வழக்காயிருப்பவன். 'அவன் என்னாகி ஒழிந்தான், வானே மாநிலமே மற்றுமுற்றும் என்னுள்ளனவே.' *(திருவாய்மொழி: 5: 2: 1.)*

112. பின்பு உளது இடை மன்னும் பிரிவு உளது என உன்னேல்—இப்பொழுது நாம் பிரிந்த பின்பு உளதாகிய பிரிவு இடையிலே சில காலம் மட்டும் நிலைக்கும் பிரிவு; ஆதலால் அப்பிரிவு உள்ளது என்று எண்ணாதே. முடிவு உளது என உன்னா அன்பு—அளவு உண்டு என்று கருதமுடியாத அன்பு; எல்லையில்லாத பேரன்பு. அத்தகைய அன்புள்ள நாம் இனி ஐவர் உளரானோம். *(யுத்த: 61.)*

113. படர் உற—என்னைத் தொடர்ந்து செல்ல. உம்பி—இலக்குவன். இடர் உறு தகையாயோ—நீ துன்பமுறத் தக்கவனோ? அல்லை.

114 அங்குள கிளைகாவற் கமைதியின் ஊளனும்பி
இங்குள கிளைகாவற்கு யாருளர் இசையாய்நீ
உன்கிளை எனதன்றோ உறுதுயர் உறலாமோ
என்கிளை இதுகாவென் ஏவலின் இனிதென்றான். 32

115 பணிமொழி கடவாதான் பருவர லிகவாதான்
பிணியுடை யவனென்னும் பிரிவினன் விடைகொண்டான்
அணியிழை மயிலோடும் ஐயனும் இளையோனும்
திணிமர நிறைகானிற் சேணுறு நெறிசென்றார். 33

---

114. உம்பி—பரதன். உன்கிளை எனதன்றோ—குகன் மீது கொண்ட அன்பு அவன் இனத்தவர் யாவர் மாட்டும் சென்றது. உறுதுயர்—மிக்கதுயர்.

115. பணிமொழி கடவாதான்–எல்லை நீத்த அருத்தியனுகிலும் கட்டளையிட்ட சொல்லை மீறாதவன். பருவரல் இகவாதான்—துன்பக் கடலின் எல்லையை விட்டுவர முடியாதவன். பிணியுடையவன் என்னும் பிரிவினன்—பிரிவுத் துன்பமாகிய நோய்வாய்ப் பட்டவன் போன்று பிரிய ஒருப்பட்டு நின்றவன். திணிமரம் நிறை கானில்—கிளைகள் அடர்ந்த மரங்கள் நெருங்கிய காட்டிலே. நெடுந்தூரம் செல்லும் வழியிலே சென்றார்.

---

## 21. இராமபிரான் பிராட்டிக்குச் சித்திரகூட மலைவளங் காட்டுதல்.

---

பாரத்துவாச முனிவனிடம் விடைபெற்றுச் சென்ற மூவரும் காளிந்தி நதியைக் கடந்து பல காவதஞ் செல்ல, சித்திர கூட மலைச்சிகரம் தென்பட்டது. இராமபிரான் வழி நடந்த வண்ணம் அம்மலையின் வியத்தகு காட்சிகளைச் சீதாபிராட்டிக்குக் காட்டுவானாயினான். அப்படி அவன் காட்டிக் கூறியவற்றிற் சிலவற்றை இச்செய்யுள்களிற் காணலாம்.

கங்கைக்கரை மருங்கினூடே செல்லும்பொழுது மருத நிலக் காட்சிகளைக் கண்டு இருவரும் புதியதோர் இன்பத்தை அனுபவித்தது போல இப்பொழுது மலைவளங் கண்டு அதைப் பற்றிப் பேசியபடி மிக்கதோர் இன்பத்தை அனுபவித்தவாறே வழிநடந்தனர். இராமபிரான் அநுபவித்த இன்பம் பாட்டின்

இனிமை படிந்த ஓசையினுல் வெளிப்படுகின்றது. மலையையும் மேகத்தையும் ஒருங்கு கண்ட மயில் போன்று சீதாபிராட்டி அனுபவித்த இன்பம், மனத்துணர்ச்சி வெளிப்பட்ட முகப் பொலிவு முதலியவற்றையிட்டு இராமபிரான் விளித்த சொற் களால் விளங்கும். அயோத்தியை நீங்கி வந்த வருத்தமும் கல்லரக்கும் கடுவழி நடந்த களைப்பும் சிறிது மின்றி இன்பம் தழைப்ப மலைக் காட்சியில் ஈடுபட்டுச் சென்றமை சீரிய இசை நலம் வாய்ந்த செய்யுள்களாற் கூறப்படுகின்றது.

[தெ. ப:—சித்திர கூடப்படலம்: 1, 2, 7, 10, 14, 16, 24, 28, 29, 30, 33, 34, 35, 38, 39.]

**116** நினையுந் தேவர்க்கும் நமக்குமொத்து ஒருநெறி நின்ற
அனகன் அங்கணன் ஆயிரம் பெயருடை அமலன்
சனகன் மாமட மயிற்கந்தச் சந்தனஞ் செறிந்த
கனக மால்வரை இயல்பெலாந் தெரிவுறக் காட்டும். 1

**117** வாளும் வேலும்விட் டளாயின அனையகண் மயிலே
தாளி னேலமுந் தமாலமுஞ் சுடர்தரு சாரல்

---

116. நினையும் தேவர்க்கும்—ஆபத்து வந்த காலத்தில் உய்யும்பொருட் டுத் தன்னை நினைக்கின்ற தேவர்களுக்கும். நமக்கும்—பிரளயம் போன்ற பேராபத்து வந்தாலும், நினையாமையே யன்றி, அவ்வாபத்து வந்துற்றதையும் உணரப் பெறுத நம்போன்றவர்களுக்கும். ஒரே நிலையில் நின்று பாதுகாக் கின்ற கடவுள். அனகன்—கடவுள்: குற்றமற்றவன். அம் கணன்—(எங்ஙன மெனில்) இருதிறத்தார்கும் ஒப்ப அருள் செய்கின்ற அழகிய கண்களையுடைய வன். அமலன்—தூயவன். சனகன் மாமட மயிற்கு—சனகன் மகளாகிய பெரிய இள மயிலை ஒத்த சாயலையுடைய பிராட்டிக்கு. இயல்பாகவே மலையில் விருப்புற்று வாழும் மயில் மேகத்தைக் கண்டு குதுகலிப்பது போல, சித்திர கூட மலையிலே கார்குலாம் நிறத்தானுடன் திரிந்த பொழுதைய உவகை மேனியின் அழகில் வெளிப்பட்டமை தோன்ற 'மாமட மயில்' என்று சுட்டப் பட்டது. அந்தச் சந்தனஞ் செறிந்த கனக மால்வரை இயல்பு:—இப்பகுதியிற் கூறும்பொருள் இதுவேயாகும்.

117. வாளின் தன்மையையும் வேலின் தன்மையையும் வேறு வேறு வாங்கி ஒன்று சேர்த்துத் திருத்தஞ் செய்தமைத்தாற்போன்ற கண்ணையுடை யவளே! தாளின்—மலையடிவாரத்தில். ஏலம்—ஏலமரம். தமாலம்—பச்சிலை மரம். சுடர் தரு—ஒளி விடுகின்ற. சாரல்—பக்கமலை. நீள மாலைய—நீண்ட

நீள மாலேய துயில்வன நீருண்ட கமஞ்சூற்
காள மேகமு நாகமுந் தெரிகில காணுய். 2

118 நீண்ட மால்வரை மதியுற நெடுமுடி நிவந்த
தூண்டு மாமணிச் சுடர்சடைக் கற்றையிற் றேன்ற
மாண்ட வானிற அருவியம் மழவிடைப் பாகன்
காண்ட குஞ்சடைக் கங்கையை நிகர்ப்பன காணுய். 3

119 உருகு காதலிற் றழைகொண்டு மழலேவண் டோச்சி
முருகு நாறுசெந் தேனினே முழைநின்றும் வாங்கிப்
பெருகு சூலிளம் பிடிக்கொரு பிறைமருப்பி யானே
பருக வாயினிற் கையினின் றளிப்பது பாராய். 4

120 ஒருவில் பெண்மையென் றுரைக்கின்ற உடலினுக்குயிரே
மருவு காதலின் இனிதுடன் ஆடிய மந்தி
அருவி நீர்கொடு வீசத்தான் அப்புறத் தேறிக்
கருவி மாமழை உதிர்ப்பதோர் கடுவனேக் காணுய். 5

---

வரிசையாக உள்ளனவாய். துயில்வன—துயில்வன வாகிய (மேகமும், நாகமும்.) நீர் உண்ட கமம் சூல் காளமேகம்—நீரையுண்டமையால் நிறைந்த கருக்கொண்ட கரிய மேகம். கமம்—நிறைவு. நாகம்—யானே.

118. பெரிய மலேயின் கண்ணே சந்திரன் வந்துறுதலாலே. நிவந்த—எழுந்த. தூண்டும் மாமணிச் சுடர்—பிரகாசிக்கின்ற பதுமராகங்களின் ஒளி. சடைக் கற்றையில் தோன்ற—சிவபெருமானது அடர்ந்த சடைகளேப் போலத் தோன்ற. மாட்சிமைப் பட்ட வெண்ணிறத்தைக் கொண்ட இம்மலேயருவி சிவபெருமானது சடா மகுட கங்கையை ஒப்பன. வால் நிற அருவி. வால்—வெண்மை. மழவிடை—இளமை பொருந்திய இடபம்.

119. மழலே வண்டு ஒச்சி—இன்குரல் மிழற்றியபடி தேனிலே மொய்க்கும் வண்டுகளே ஓட்டி. முருகு நாறு செந்தேன்—நறுமணங்கமழும் நல்ல சிவந்த தேன். முழை நின்றும் வாங்கி—கல் முழையினின்றும் எடுத்து. பெருகு சூல் இளம்பிடிக்கு—முதிர்கின்ற சூலினேயுடைய இளம்பிடிக்கு. பருக—பருகும்படி. வாயிலே விழும்படி தேனடையைக் கையினுலே பிழிந்தளிப்பதைப் பாராய்.

120. ஒருவுதல்—நீங்குதல். இல்—இல்லாத. நீங்குதலில்லாத. பெண்மையென்று கூறப்படும் உடலுக்கு உயிர் போன்றவளே! ஆடிய—அருவி நீராடிய. மந்தி—பெண்குரங்கு. வீச—கடுவன்மீது வீச. கருவி மாமழை—உலகம் நடத்தற்குக் கருவியாகிய பெரிய மேகத்தை. உதிர்ப்பது—குலுக்குவது: மரங்களிலுள்ள பழம் முதலியவற்றை உதிர்த்துப் பழகிய பழக்கத்தால் மேகத்திலுள்ள நீரையும் குலுக்கி உதிர்த்தது. கடுவன்—ஆண் குரங்கு.

121 சீலம் இன்னதென்று அருந்ததிக் கருளிய திருவே
நீல வண்டினம் படிந்தெழ வளைந்துடன் நிமிர்ந்த
கோல வேங்கையின் கொம்பர்கள் பொன்மலர் தூவிக்
காலி னிற்றொழு தெழுவன நிகர்ப்பன காணாய். 6

122 நினைந்த போதினும் அமுதொக்கும் நேரிழை நிறைதேன்
வனைந்த வேங்கையிற் கோங்கினில் வயின்தொறுந் தொடுத்துக்
குனிந்த ஊசலிற் கொடிச்சியர் எடுத்தஇன் குறிஞ்சிக்
கனிந்த பாடல்கேட் டசுணமா வருவன காணாய். 7

123 குழுவு நுண்டொளை வேயினும் குறிநரம் பெறிவுற்று
எழுவு தண்டமிழ் யாழினு மினியசொற் கிளியே
முழுவ தும்மலர் விரிந்தன முருக்கிடை மிடைந்த
பழுவம் வெங்கனல் கதுவிய தொப்பன பாராய். 8

124 வளைகள் காந்தளிற் பெய்தன அனையகை மயிலே
தொளைகொள் தாழ்தடக் கைநெடுந் துருத்தியிற் றூக்கி

---

121. சீலம்—கற்பு முதலிய பெண்களுக்குரிய குணங்கள். படிந்து எழ வளைந்து உடன் நிமிர்ந்த—படியுங்கால் வளைந்து, எழுங்கால் உடன் நிமிர்ந்த (கொம்பர்). கோலம்—அழகு. பொன் மலர்—பொன்னிறமுள்ள வேங்கை மலர்கள். காலினில் தொழுது எழுவன—பாதங்களிலே விழுந்து வணங்கி எழுவதை. கொம்பர்கள் சீதையின் அழகிற்கு ஒவ்வாமல் அவளை மலர் தூவிப் பணிவதைப் போன்றன.

122. அமுது ஒக்கும்–அமுதென இனிக்கும். நேரிழை-விளி. வனைந்த-தங்கிய; ஒழுங்குபெறச் சேகரிக்கப்பட்ட. வயின் தொறும்—மற்றும் இடங்களிலும். தொடுத்து—கட்டி. குனிந்த ஊசல்—வளைந்த ஊஞ்சல். கொடிச்சியர்—குறிஞ்சி நிலப் பெண்கள். எடுத்த இன் குறிஞ்சி—எடுத்துப் பாடிய இனிய குறிஞ்சிப் பண். கனிந்த பாடல்—முதிர்ந்த சுவையுள்ள பாடல்.

123. குழுவு நுண் தொளைவேய்—கூட்டமாகிய நுண்ணிய தொளைகளையுடைய புல்லாங்குழலின் இசை. குறி நரம்பு எறிவுற்று எழுவு யாழ்—குறித்த ஓசையை எழுப்பவல்ல நரம்பை விரலால் தடவி யெறிந்து எழுப்பப்படும் யாழிசை: தண் தமிழ் யாழ்—குளிர்ச்சி பொருந்திய இனிய யாழிசை. தமிழ்—இனிமை. முழுவதும் மலர் விரிந்தன முருக்கு—முருக்க மரம்; பலாச மரம். இதன் பூ நல்ல செந்நிறம். இடை மிடைந்த பழுவம்—நடுவிலே அடர்த்தியாக வளர்ந்த சோலை. கதுவியது—பற்றியது.

124. வளைகளைக் காந்தள் மலரில் இட்டாற் போன்று அழகிய கைகளையுடைய மயில் போன்ற சாயலை யுடையவளே! தொளை-துவாரம். கையெனும்

அளவின் மூப்பினர் அருந்தவர்க் கருவிநீர் கொணர்ந்து
களப மால்கரி குண்டிகைச் சொரிவன காணாய். 9

125 வடுவின் மாவகிர் இவையெனப் பொலிந்தகண் மயிலே
இடுகு கண்ணினர் இடருறு மூப்பின ரேக
நெடுகு கூனல்வால் நீட்டின உருகுறு நெஞ்சக்
கடுவன் மாதவர்க் கருநெறி காட்டுவ காணாய். 10

126 தெரிவை மார்க்கொரு கட்டளை எனச்செய்த திருவே
பெரிய மாக்களிற் பலாக்களிற் பிறங்கிய வாழை
அரிய மாக்கனி கடுவன்கள் அன்புகொண் டளிப்பக்
கரிய மாகிழங் ககழ்ந்தன கொணர்வன காணாய். 11

127 ஐவ னக்குரல் ஏனலின் கதிரிறுங் கவரை
மெய்வ ணக்குறு வேயின மீன்றமெல் லரிசி
பொய்வ ணக்கிய மாதவர் புரைதொறும் புகுந்துன்
கைவ ணத்தவாய்க் கிள்ளைதந் தளிப்பன காணாய். 12

---

துருத்தி—கையாகிய தோற்பை. தூக்கி—முகந்து. மூப்பினராகிய அருந்தவர்க்கு. களபமால் கரி—யானைக் கன்றுகள். களபம்—யானைக் கன்று. குண்டிகை—கமண்டலம்.

125. வடுவின் மாவகிர்: மாவடுவின் வகிர். வகிர்—இரு பிளவு. இடுகு கண்—இடுங்கிய கண். நெடுகு கூனல் வால்-நெடுகிலும் வளைந்து கொடுக்கும் வால். கடுவன்—ஆண் குரங்கு.

126. தெரிவைமார்க்கு ஒரு கட்டளை எனச் செய்த திருவே—பெண்களின் அழகு, குணம் முதலியவற்றை மதிப்பிடற்கு உரைத்துப் பார்க்கும் ஒரு கட்டளைக் கல் போன்று படைக்கப்பட்ட இலக்குமியை ஒத்தவளே! கட்டளை—திட்டமாகச் செய்யப்பட்ட ஓர் உருவம். மா—மாமரம். பிறங்கிய—விளங்கிய. கரிய மா—பன்றிகள். கிழங்கு--கிழங்குகளை. அகழ்ந்தன—அகழ்ந்து.

127. ஐவனக் குரல்—மலை நெல்லின் கதிர். ஏனல்—தினை. இறுங்கு—சோளம். மெய் வணக்குறு வேயினம் ஈன்ற மெல்லரிசி—உடல் வளையப் பெற்ற மூங்கிலின் கூட்டம் அளித்த மெல்லிய மூங்கிலரிசி. பொய் வணக்கிய—பொய்யை ஓட்டிய: உண்மையை விடாத. புரை தொறும்—ஆச்சிரமந் தோறும். உன் கை வணத்த வாய்க் கிள்ளை—உன் கையின் அழகை ஒத்த வாயையுடைய கிளிகள்: கை என்றது கை நகங்களை. தந்தளிப்பன—அன்போடு கொடுப்பனவற்றை.

128 இடிகொள் வேழத்தை யெடுத்துடன் எயிற்றெடு விழுங்கும்
கடிய மாசுணம் கற்றறிந் தவரென அடங்கிச்
சடைகொள் சென்னியர் தாழ்விலர் தாமிதித் தேறப்
படிகள் தாமெனத் தாழ்வரைக் கிடப்பன பாராய். 13

129 விடங்கொள் நோக்கிநின் னிடையினை மின்னென வெருவிப்
படங்கொள் நாகங்கள் முழைபுகப் பதைப்பன பாராய்
மடங்கல் ஆளிக ளெனக்கொண்டு மழையின முழங்கக்
கடங்கொள் கார்மதக் கைம்மலை இரிவன காணாய். 14

130 இனைய யாவையும் ஏந்திழைக் கியம்பினன் காட்டி
அனைய மால்வரை அருந்தவர் எதிர்வர வணங்கி
வினையின் நீங்கிய வேதியர் விருந்தின னுனன்
மனையின் மெய்யெனும் மாதவம் புரிந்தவன் மைந்தன். 15

---

128. இடிகொள் வேழம்—இடி போலப் பிளிறுகின்ற யானை, மலைப் பாம்பு யானையை விழுங்கும் பொழுது பிளிறியபடி உட்செல்லும். (பால: 64.) எயிறு—தந்தம். கடிய—கொம்போடு விழுங்கும் வன்மை வாய்ந்த. மாசுணம்—மலைப்பாம்புகள். சடைகொள் சென்னியர்—சடைமுடி தரித்த தலையினராகிய முனிவர். தாழ்விலர்—குற்றமற்றவர். தாழ்வரை—மலையடி வாரம்.

129. விடங்கொள் நோக்கி—நஞ்சின் தன்மையைக் கொண்ட நோக்கத்தை யுடையவளே! 'நஞ்சங்களை வெலவாகிய நயனங்களையுடையாள்.' (அயோத்தி: 78.) வெருவி—அஞ்சி. படங்கொள் நாகம்—பிறர் அஞ்சும்படி படமெடுத்தாடும் பாம்புகள். இப்பொழுது தாமே அஞ்சிப் பதைபதைப்போடு புற்றினுள் விரைந்து செல்வன. மடங்கல் ஆளிகள்—சிங்கங்களும் யாளி களும். எனக்கொண்டு—என்று இடியோசையை உட்கொண்டு. கடம்கொள் கார்மதக் கைம்மலை இரிவன—அச்சத்தினாலே கன்னத்தினின்றும் கரிய மத நீரைச் சிந்தியபடி யானைகள் பயந்து ஓடுவன.

130. இனைய யாவையும்—இதுபோன்ற மலைக் காட்சிகளை யெல்லாம். ஏந்திழைக்கு—இராமபிரானோடு சேர்ந்து மலைவளங் கண்ட உவகையினால் ஆபரணங்களும் ஒரு புதிய அழகைப் பெறுகின்ற சீதா பிராட்டிக்கு. அனைய மால்வரை அருந்தவர்—அத்தகைய சித்திரகூட மலையில் இருக்கின்ற அரிய தவமுனிவர். மனையின் மெய்யெனும் மாதவம் புரிந்தவன் மைந்தன்—இல் வாழ்க்கையிலிருந்தபடியே எல்லா அறங்களினும் மேலான வாய்மை விரதம் பூண்டு அதை நிறைவேற்றிய தயரதன் மகன். 'பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று', என்பது ஈண்டு உணரற் பாலது.

## 22. பரதனும் குகனும் சந்தித்தமை.

தன் பெருஞ்சேனையோடு கங்கையின் வடகரையை வந்தடைந்த பரதனைக் குகன் கண்டது முதல் இருவரும் சந்தித்துப் பேசி நட்புக்கொண்டதுவரை நிகழ்ந்தவற்றைக் கூறுவது இப்பகுதி.

இதிற்கூறப்படும் பொருள் இராம பக்தியிற் சிறந்த குகன் பரதன் இருவரும் சந்தித்தமையே. இராமபிரானிடம் விடைபெற்றது முதல் அவன் திருமேனி யழகிலும் ஏழை வேடன் என்றிகழாது தன்னைத் தம்பிமாருள் ஒருவனாக அங்கீகரித்த நினைவருங் குணத்திலும் ஈடுபட்ட குகன், அப்பிரான் கூறிய ஒரு சொல்லையே நினைந்து நினைந்து தரித்திருந்தவன், வடகரையில் பெருஞ்சேனையுடன் பரதன் வந்திறங்கியதைக் கண்டதும் அப்பிரான்மீது கொண்ட ஆராத காதலால் பரதனைச் சந்தேகிக்கலானான். அப்பிரானுக்கு இன்னல் விளைக்கவே பெருஞ்சேனையும் உடன் கொணர்ந்தான், என்று எண்ணினான். கைகேயியின் கொடிய வஞ்சனையையும் உன்னினான்; கோபம் எல்லைகடந்தது. தன் வீரர்களை அழைத்து எச்சரிக்கை செய்தான்; பரதனையும் சேனையையும் ஒரு நொடியில் வானுலகனுப்புவேன் என்று வீராவேசம் பேசினான். இதற்கிடையில் வடகரை மருங்கில் வந்து நின்ற பரதனையும் தம்பியையும் நேரிற் கண்டான். சீரம் புனைந்து, அவலம் ஈதென எழுதிய படிவமொத்து, திசை நோக்கித் தொழுகின்ற பரதனை உற்றுநோக்கினான். நெஞ்சம் திடுக்கிட, வில் கையினின்றும் வழுவ, இராமன் பின்பிறந்தார் பிழை செய்யாரென்பதை உணர்ந்தான். பின்பு ஒரு படகில் தனியே சென்று பரதனை வணங்கினான். அவன் இவனைத் தழுவினான். அவசரம் தாங்காத குகன், 'வந்தது என்?' என்னலும், அவன், 'அரசனை அழைத்துச் செல்ல' என்றான். மறுபடியும் குகன் பரதன் பாதங்களில் விழுந்து வணங்கினான். உவகை வீங்க உடல் தடித்தான்; பரதனை வாயாரப் புகழ்ந்தான். 'ஆயிரம் இராமரும் உனக்கு நிகரில்லை', என்றிங்ஙன மெல்லாஞ் சொல்லி, பரதனிடம் இராமன் பால் வைத்ததை ஒத்த காதலைக் கொண்டான். நிமிர்ந்த சீற்றம் அன்பு கனிந்த காதலாக மாறிற்று. இத்தகைய மனமாற்றம் மிகச் சீரிய முறையில் ஆசிரியரால் காட்டப்படுகின்றது. மனோபாவத்திற் கிசைந்த வண்ணம் செய்யுள் ஓசையும் மாறிச் செல்கின்றது.

[தெ. ப:—குகப்படலம்:—12-37.

131 தோன்றிய புளிஞரை நோக்கிச் சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை உம்ப ரேற்றுதற்கு
ஏன்றனென் என்னுயிர்த் துணைவற் கீகுவான்
ஆன்றபே ரரசுநீர் அமைதி ராமென்றான், 1

132 துடியெறி நெறிகளுந் துறையுஞ் சுற்றுற
ஓடியெறி அம்பிகள் யாவும் ஓட்டலிர்
கடியெறி கங்கையின் கரைவந் தோர்களைப்
பிடியெறி படவெனப் பெயர்த்துங் கூறுவான். 2

## வேறு

133 அஞ்சன வண்ணன்என் ஆருயிர் நாயகன் ஆளாமே
வஞ்சனை யாலரசெய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
உஞ்சிவர் போய்விடின் நாய்க்குகன் என்றெனை ஓதாரோ. 3

---

131. பரதன் சேனை கங்கையின் வடகரையை அடைந்து நீரைக் கலக்கக் கண்ட குகன் தன் சேனையைக் கூவியழைத்தான். அச்சேனையும் புலியெலாம் ஒருவழித் திரண்டது போன்று வந்தது. அச் சேனைவீரரை நோக்கிக் கூறுவானாயினன். புளிஞர்—வேடர். சூழ்ச்சியின்—சதியாலோசனையோடு. ஊன்றிய—எதிர்ப்பதில் நிலைநின்ற. உம்பர்—வானுலகம்: உம்பர் ஏற்றுதல்—கொல்லுதல். ஏன்றனென்—தொடங்கியுள்ளேன். எதன் பொருட்டு எனின்:—என் உயிர்த் துணைவனாகிய இராமபிரானுக்குக் கொடுத்தற்கு. எதை எனின்:—ஆன்ற பேராசை—சிறந்த பெரிய இராச்சியத்தை. அதற்கு நாங்கள் செய்வது யாது எனின்:—நீங்கள் இதற்குச் சம்மதியுங்கள்.

132. துடி எறி—பறைகளை முழக்குங்கள். நெறிகளும் துறையுஞ் சுற்றுற ஓடி எறி—வழிகளையும் நீர்த்துறைகளையும் முழுவதும் வெட்டி எறி. இவை தனித்தனி சிலருக்கு இட்ட கட்டளை. அடுத்தபடி படகு செலுத்தும் குழுவினரைப் பார்த்துக் கூறுகின்றான்: அம்பிகள் யாவும் ஓட்டலிர்—தோணிகளுள் எவற்றையும் ஓட்டாதிர். (யாவரேனும் நீந்தி, அன்றி வேறு வகையில்) கடி எறி கங்கையின் கரை வந்தோர்களை—நறுமணம் வீசுகின்ற கங்கைக் கரையில் வந்தவர்களை. பிடி—கைப்பற்று; எறி—மறுபடியும் நீரிலே வீசு: பட—பட்டழியும்படியாக.

133. அஞ்சன வண்ணன்—இராமபிரான் அழகில் ஈடுபடுகிறான்; 'கார் குலாம் நிறத்தானை' முதன்முதற் கண்ட காட்சி அகக்கண்முன் எழுகின்றது. என் ஆருயிர் நாயகன்—தனக்கு அருள் செய்த அருங்குணத்தில் ஈடுபடுகிறான். ஆளாமே—ஆளவேண்டிய அவன் ஆளாதபடி. (அவனைக் காட்டுக்கனுப்பி) வஞ்சனையால் அரசெய்திய மன்னரும் வந்தாரே:—கோபமும் இகழ்ச்சியும் படப் பேசுகின்றான். செஞ்சரம் என்பன தீ உமிழ்கின்றன செல்லாவோ—செம்மையாகிய (வளைவு இல்லாத) அம்புகள், நெருப்பைக் கக்கியபடி செல்லும் இயல்பின இவரை ஊடுருவமாட்டாவோ? உஞ்சு—உய்ந்து; தப்பி.

134 ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை என்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
ஏழமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ. 4

135 முன்னவ னென்று நினைந்திலன் மொய்புலி யன்னானோர்
பின்னவன் நின்றன னென்றிலன் அன்னவை பேசானேல்
என்னிவன் என்னை இகழ்ந்தது இவ்வெல்லை கடந்தன்றோ
மன்னவர் நெஞ்சினில் வேடர் விடுஞ்சரம் வாயாவோ. 5

136 பாவமு நின்றபெ ரும்பழி யும்பகை நண்போடும்
ஏவமு மென்பவை மண்ணுல காள்பவர் எண்ணாரோ
ஆவது போகஎன் னாருயிர்த் தோழமை தந்தான்மேற்
போவது சேனையும் ஆருயி ருங்கொடு போயன்றோ. 6

137 அருந்தவம் என்துணை ஆள இவன்புவி ஆள்வானோ
மருந்தெனின் அன்றுயிர் வண்புகழ் கொண்டுபின் மாயேனோ

---

134. விலங்கிடும் வில்லாளோ—விலகிப் போகின்ற வில்லாட்களோ என்னுடைய வீரர். தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ—'தோழன் நீ' என்று இராமபிரான் சொல்லியருளிய சொல் என் உயிரைத் திறைகொண்ட ஆயிரத்துக்கொரு சொல்லன்றோ? ஏழமை—உயிரிலே வைத்த ஆசைக்கு அடிப்பட்ட அறிவீனம்.

135. முன்னவன் என்று நினைந்திலன்—அண்ணன்மீது உள்ளன்புதானில்லை யென்றாலும் உலக அபவாதத்திற்காவது அஞ்சினானல்லன். மொய்புலி-வலிமை மிக்க புலி. பின்னவன்-இலக்குவன். அன்னவை அண்ணன் என்ற முறை, தம்பியின் வலிமை இவை போன்றவை. பேசானேல்—இவைபோன்றவற்றையிட்டுத் தக்க சமாதானம் கூறானேல். அது என்னை இகழ்ந்ததாகும்; அப்படி என்னை இகழ்ந்தது எந்த வலிமையைக் கொண்டு ! இவ்வெல்லையைத் தாண்டினாலன்றோ இவன் வீரமும் வலிமையும். வாயாவோ—தொளைக்க மாட்டாவோ? மாட்டா என்று எண்ணினானோ ?

136. ஏவம்—குற்றம். பாவம் இது, பழி அது, பகைவர் அவர், நண்பர் இவர் என்பன போன்றவற்றை மண்ணாசை கொண்ட அரசர் என்போர் நினைக்கமாட்டார்களோ? ஆவது போக-சரி வருவது வரட்டும். மேல் போவது—மேற்செல்வது. சேனையையும் உயிரையும் கொண்டு செல்வதை ஒரு கை பார்ப்போம்.

137. செய்தற் கரிய தவத்தை என் துணைவனாகிய இராமபிரான் செய்து வருந்த, மருந்து—அமுதம். உயிர் அமுதமோ எனின் அன்று. ஆதலால்

பொருந்திய கேண்மை யுகந்தவர் தம்மொடு போகாதே
இருந்தது நன்று கழிக்குவென் என்கடன் இன்றேடே. 7

138 தும்பியு மாவு மிடைந்த நெடும்படை சூழ்வாரும்
வம்பியல் தாரிவர் வாள்வலி கங்கை கடந்தன்றே
வெம்பிய வேட ருளீர்துறை ஓடம் விலக்கீரோ
நம்பிமுன் னேஇனி நம்முயிர் மாய்வது நன்றன்றே. 8

139 போனப டைத்தலை வீரர்த மக்கிரை போதாஇச்
சேனைகி டக்கிடு தேவர் வரிற்சிலை மாமேகம்
சோனைப டக்குடர் சூறைப டச்சுடர் வாளோடும்
தானைப டத்தனி யானைப டத்திரள் சாயேனே. 9

140 நின்ற கொடைக்கை என்அன்பன் உடுக்க நெடுஞ்சீரை
அன்று கொடுத்தவள் மைந்தர் பலத்தைஎன் அம்பாலே

---

உயிரைவிட்டு வண்மையாகிய புகழைக் கைக்கொண்டு, 'மருவலரெனின் முன்னே மாள்குவென்' என்று முன்பு கூறிய சொல்லை நிலை நாட்ட மாட்டேனே? கேண்மை—நட்பு. நான் இராமனுடன் வனஞ் செல்லாமலிருந்தது நன்று. இன்றேடே—இன்றைக்கே.

138. தும்பி—யானை. மா—குதிரை. மிடைந்த—நெருங்கிய. சூழ்வு ஆரும்—சூழ்தலைப் பெற்றுள்ள, வம்பு இயல் தார் இவர்—வாசனை பொருந்திய மாலையை அணிந்த இவர்களது. வெம்பிய வேடருளீர்—வன்கண்மை நிறைந்த வேடர் குலத்தவரே! துறை ஓடம் விலக்கீர்—இவர்கள் பொருட்டுத் துறையிலுள்ள ஓடம் விடுதலை விலக்குவீர். வந்தவர்கள் பெரிய வீரர் என்று நீங்கள் கருதினுல் இவர்களோடு போர்செய்து நம்பி அழிவதற்கு முன்னே நம்முயிரை விடுவது நல்ல செயலல்லவா?

139. போன—காட்டிற்குப் போன. படைவீரர்; தலைவீரர்: படைக் கலங்களையுடைய தலைமை சான்ற பெரு விறல் வீரர்; இராம லக்குமணர். இரைபோதா—ஒரு சிறிதும் எதிர் நிற்கலாற்றுத (இச்சேனை.) கிடக்கிடு—கிடக்கட்டும்: இருக்கட்டும். இச்சேனையை அழிக்க அவ்வளவு பெரிய படைவீரர் வேண்டுமோ? யானெருவன் அமையாதோ? தேவர் வரின்—தேவர்களே இவர்களுக்குத் துணையாக வரினும்: சிலை மா மேகம் சோனை பட-எனது வில்லாகிய பெரிய மேகம் அம்பாகிய மழையைப் பொழிதலாலே. குடர் சூறைபட-குடல்களெல்லாம் சூறைக் காற்றிலகப்பட்ட பாடுபடவும்: அதாவது நாலாபக்கமும் சிதறவும். சுடர் வாளோடும் தானை பட—உருவிய வாளேந்திய நிலையில் சேனைகள் பட்டு விழவும். திரள் சாயேனே-கூட்டங் கூட்டமாக யானொருவனே வெட்டிச் சாய்க்க மாட்டேனே?

140. பலத்தை—சேனு பலத்தை; சேனையை. நிணம்—கொழுப்பு. துன்று திரைக்கடல்—நெருங்கிய அலைகளையுடைய கடலின் கண்ணே. கங்கை

கொன்று குவித்த நிணங்கொள் பிணக்குவை கொண்டோடித்
துன்று திரைக்கடல் கங்கை மடுத்திடை தூராதோ. 10

141 ஆடு கொடிப்படை சாடி அறத்தவ ரேயாள
வேடு கொடுத்தது பாரெனும் இப்புகழ் மேவீரோ
நாடு கொடுத்தஎன் நாயக னுக்கிவர் நாமாளும்
காடு கொடுக்கில ராகி யெடுத்தது காணீரோ. 11

142 மாமுனி வர்க்குற வாகி வனத்திடை யேவாழுங்
கோமுனி யத்தகு மென்று மனத்திறை கொள்ளாமே
ஏமுனை யுற்றிடில் ஏழு கடற்படை யென்றாலும்
ஆமுனை யிற்சிறு கூழென இப்பொழு தாகாதோ. 12

143 என்பன சொல்லி இரும்பன மேனியன் ஏனோர்முன்
வன்பணை வில்லினன் மல்லுயர் தோளினன் வாள்வீரற்கு
அன்பனும் நின்றனன் நின்றது கண்டரி ஏறன்ன
முன்பனின் வந்து மொழிந்தனன் மூரிய தேர்வல்லான். 13

## வேறு

144 கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவன் உயர்தோளான்
வெங்கரியின் ஏறனையான் விற்பிடித்த வேலையினன்
கொங்கலரும் நறுந்தண்டார்க் குகனென்னும்
குறியுடையான். 14

---

மடுத்து—கங்கைநதியிற் சேர்து (நிறைந்து.) இடை தூராதோ—(கடல்) இடத்தைத் தூர்த்துவிடாதோ?

141. ஆடு கொடிப்படை—ஆடுகின்ற கொடிகளை உயர்த்திய சேனையை. சாடி—அழித்து. வேடு—வேட்டுவச்சாதி. எடுத்து—படையெடுத்துவந்து. காணீரோ—பார்த்தீர்களல்லவோ?

142. கோ—இராமபிரான். இறை கொள்ளாமே—சிறிதும் மனத்திற் கொள்ளாது. ஏ முனை உற்று இடின்—அம்புகளைப் போர்முனையிலே நின்று விடின். கடற்படை —கடல் போலும் படை. ஆ—பசு. முனையின்—முன்னர். சிறு கூழ்—இளம் பயிர். பசுமுன் உள்ள இளம் புல் முதலிய இல்லாமற் போதல் போன்று இருந்த இடந்தெரியாமல் அழிவர்.

143. இரும்பன மேனியன்—இரும்பு போன்று உறுதிபெற்ற மேனியன். ஏனோர் முன்—ஏனைய வேடர்களுக்கு முன். வாள் வீரன்—இராமபிரான். மேனியன் வில்லினன் தோளினனுகிய அன்பன் ஏனோர் முன் நின்றனன். அரி ஏறன்ன முன்பன்—பரதன். முன்பு—வலிமை. மூரிய—வலிய. தேர் வல்லான்—சுமந்திரன்.

144. நாவாய்—படகுகள். வெம் கரியின் ஏறு அனையான்—மதங் கொண்ட ஆண் யானை போன்றவன். வில்லைக் கையிலேகொண்ட சேனை சமுத்திரத்தை யுடையவன். கொங்கு அலரும்—தேன் சொரிகின்ற. குறி—பெயர்.

145 கற்காணுந் திண்மையான் கரைகாணுக் காதலான்
அற்காணிற் கண்டனைய அழகமைந்த மேனியான்
மற்காணுந் திருநெடுந்தோள் மழைகாணு மணிநிறத்தாய்
நிற்காணும் உள்ளத்தான் நெறியெதிர்நின்
றனன்என்றான். 15

146 தன்முன்னே யவன்தன்மை தந்தைதுணை முந்துரைத்த
சொன்முன்னே உவக்கின்ற துரிசிலாத் திருமனத்தான்
மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல்
என்முன்னே அவற்காண்பென் யானேசென்
றெனவெழுந்தான். 16

147 என்றெழுந்த தம்பியொடும் எழுகின்ற காதலொடும்
குன்றெழுந்து சென்றதெனக் குளிர்கங்கைக் கரைகுறுகி
நின்றவனை நோக்கினான் திருமேனி நிலையுணர்ந்தான்
துன்றுகரு நறுங்குஞ்சி எயினர்கோன் துண்ணென்றான். 17

---

145. கல் காணும் திண்மையான்—மலையை ஒத்த வலிமையை யுடையவன். கரை காணுக் காதலான்—இராமன்பால் கரைகாண வியலாத காதலை யுடையவன். அல்—இருள். காணில் அல் கண்டனைய அழகமைந்த மேனியான்: இன்றேல், அற்கு ஆணி கண்டனைய மேனியான்—இருளுக்கு உரையாணியைக் கண்டாலொத்த மேனியான். மல் காணும்—வலிமையின் எல்லையைக் கண்ட. மணி நிறம்—அழகிய நிறம். மழை காணும்—மேகத்தைக் கண்டாலொத்த. நின் காணும் உள்ளத்தான்—குகன் வழியெதிரே நிற்றலைக் கண்டு இங்ஙனம் கூறினான்.

146. தன் முன்னே—தனக்கு முன்பு. தந்தை துணை—தயரதனுக்குத் துணைவனான சுமந்திரன். முந்து உரைத்த சொல் முன்னே—முன்பு உரைத்த சொல்லினைக் கேட்டதும் கேளாததும். துரிசு—குற்றம். திருமனத்தான்—பரதன். மன்—இராமபிரான். தழீஇக்கொண்ட—தழுவிக்கொண்ட: தோழமை கொண்ட. மனக்கு—மனத்துக்கு. துணைவனேல்—நண்பனாயின். என்—அவன் வரும் வரையில் காத்திருப்பது எதற்கு? முன்னே யானே அவன் காண்பன்-அவன் என்னைக் காண்பதற்கு முன்னாக நானே அவனைக்காண்பேன். எழுந்தான்—இருக்கையினின்றும் எழுந்தான்.

147. என்று—என்று கூறி. எழுந்த தம்பியுடன்—தானெழுந்த பொழுதே உடனெழுந்த சத்துருக்கனுடன். எழுகின்ற காதலொடும்—உவப்பு காதலாக வளரலாயிற்று. குன்றெழுந்து சென்றதெனக் குளிர் கங்கைக் கரை குறுகி நின்றவனை—பரதனை. குகன் நோக்கினான். நெருங்கிய கரிய வாசனை வீசுகின்ற குஞ்சியை யுடைய வேடர் தலைவன் திடுக்கிட்டான்.

148 வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கரைகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையி னின்றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான். 18

149 நம்பியுமென் நாயகனை ஒக்கின்றான் அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான் தவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ
பிழைப்பென்றான். 19

150 உண்டிடுக்கண் ஒன்றுடையான் உலையாத அன்புடையான்
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான் குறிப்பெல்லாங்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்கள் நெறியென்னாத்
தண்டுறையோர் நாவாயில் ஒருதனியே தான்வந்தான். 20

---

148. வற்கலை—மரவுரி. நல் கலையில் மதிஎன்ன—நல்ல பிரகாசமான கலைகளை இழந்த சந்திரன் போன்று. கல்கனிய கரைகின்ற துயரானை—கண்ட கல்லும் கரையும்படி மனம் உருகும் துயரத்தை யுடையவனை: குகன் மனத்திலே தோன்றிய அபிப்பிராயம். கண்ணுற்றான்—முன்பு திருமேனி நிலையுணர்ந்தான்; இப்பொழுது மனநிலையை நன்கு கண்டான். வில் கையினின்று இடை வீழ—கையில் இருந்த வில் தானாகவே நழுவிக் கீழே வீழ. விம்முற்று—மனங்கலங்கி. நின்றொழிந்தான்—செயலற்று நின்றான்: முதலிலே பரதன் மீது எழுந்த கோபம் முதலியன நீங்கப்பெற்றான்.

149. நம்பி—முன்பு 'வஞ்சனையால் அரசெய்திய மன்னர்' என்று குறிப்பிட்டவனை இப்பொழுது மனம் மாறிய நிலையில் 'நம்பி' என்று குறிப்பிடுகின்றான். தம்பி—இலக்குவன். திசை நோக்கி—இராமன் சென்ற தென் திசையை நோக்கி. தான் முன்பு எண்ணியது பொருத்தமில்லை என்பதை யுணர்ந்து எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு என்று எண்ணினான். பிழைப்பு—தவறு.

150. உண்டு இடுக்கண்—நீடித்த துன்பம். உலையாத—நீங்காத; அழியாத. அன்புடையான்—இராமன், கொண்ட—மேற்கொண்ட. "முன்பு நாடு கொடுத்த எம் நாயகனுக்கிவர் நாமாளும் காடு கொடுக்கிலராகி எடுத்தது காணீரோ!" என்றவன் பரதன் புனைந்த தவவேடம் முதலியவற்றையும், பெருஞ்சேனையோடு வந்ததையுங் கண்டு காரணம் இன்னதென ஊகிக்க முடியாமல் 'குறிப்பெல்லாம் கண்டுணர்ந்து பெயர்கின்றேன்' என்றான். குறிப்பெல்லாம்—மனக்கருத்து முழுவதையும். கண்டு உணர்ந்து—நேரிற்கண்டும் கேட்டறிந்தும். பெயர்கின்றேன்—விரைவில் வருகின்றேன். காமின்கள் நெறி—வழியை யெல்லாம் ஒருவரும் வாராதபடி காவல் புரிமின். தனியே—வேறு துணையின்றி.

151 வந்தெதிரே தொழுதானை வணங்கினன் மலரிருந்த
அந்தணனும் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினும் களிகூரத் தழுவினன் தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான். 21

## வேறு

152 தழுவின புளினர் வேந்தன் தாமரைச் செங்க ணானை
எழுவினு முயர்ந்த தோளாய் எய்திய தென்னை என்ன
முழுதுல களித்த தந்தை முந்தையோர் முறையி னின்றும்
வழுவினன் அதனை நீக்க மன்னனைக் கொணர்வான்
என்றான். 22

153 கேட்டனன் கிராதர் வேந்தன் கிளர்ந்தெழும் உயிர னுகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான் விம்மினன் உவகை வீங்கத்

---

151. வந்து—நாவாயின் ஒரு தனியே தான் வந்து. (150) எதிரே தொழுதானை—தனக்கு முன்னே இராமன் இருக்கும் திசை நோக்கித் தொழுத பரதனை. (149) வணங்கினன்—இராமனை வணங்குவது போன்று நீண்ட குஞ்சி மண்ணுறப் பணிந்தான். மலர் இருந்த அந்தணனும் தனைவணங்கும் அவனும்—திருமாலின் அவதாரமாகிய இராமபிரானையே அனவரதமும் நெஞ்சிலே கொண்டவனுதலால் தாமரை மலரிலுள்ள பிரமதேவனும் தன்னை வணங்குந் தகுதிவாய்ந்த பரதனும். அவன் அடிவீழ்ந்தான்—தன் பாதங்களிலே விழுந்து வணங்கிய குகனை. தந்தையினும் களிகூரத் தழுவினன்—தந்தை மைந்தனைத் தழுவும்பொழுது உள்ள உவகையினும் மிக்க களிப்புடன் தழுவுவது போன்று தழுவினன். தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்—தழுவிய நிலையில் களிகூர்ந்த குகனுடைய சிந்தனையை ஒட்டிக் கூறப்பட்டது. சீர்த்தி—புகழ்.

152. தழுவின புளினர் வேந்தன்—சீர்த்தியான் தழுவிய வேடர் தலைவன். தாமரைச் செங்கணானை—பரதனை: தழுவிய பரதன் உவகை வெளிப்பட்டபடி. எழு—கணைய மரம். எழுவினும் உயர்ந்த தோளாய்—குகன் தன்னைத் தழுவிய தோளை அளந்தபடி. எய்தியது என்னை—வந்தது யாது காரியம் பற்றி? வழுவினன்—தவறிவிட்டான். அதனை—அவ்வழுவினை. மன்னனை—உரிய மன்னனாகிய இராமனை. மன்னனைக் கொணரும் பொருட்டு எய்தியது என முடிக்க.

153. கிளர்ந்தெழும் உயிரனுகி—இராமனுக்கு ஆபத்து வருமோ என்று ஐயுற்றபொழுது வாடிய உயிராகிய பயிர் பரதன் கூறியதைக் கேட்டதும் மழை பெய்தாற் போன்று ஒரு பங்கு தழைத்து ஓங்கலாயிற்று. மீட்டும் மண்ணதனில் வீழ்ந்தான்—அதிக வெள்ளத்தினுல் பயிர் வளைந்து சாய்வது

*தீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவிற்*
*பூட்டிய கையன் பொய்யில் உள்ளத்தன் புகல லுற்ருன்.* 23

154 *தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்*
*தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்துத் தேக்கிப்*
*போயினை என்ற போது புகழினேய் தன்மை கண்டால்*
*ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியி லம்மா.* 24

155 *என்புகழ் கின்றது ஏழை எயினனேன் இரவி என்பான்*
*தன்புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்கு மாபோல்*
*மன்புகழ் பெருமை நுங்கள் மரபினேர் புகழ்க ளெல்லாம்*
*உன்புகழ் ஆக்கிக் கொண்டாய் உயர்குணத் துரவுத் தோளாய்.* 25

156 *எனவிவை இன்ன மாற்றம் இயைவன பலவுங் கூறிப்*
*புனைகழற் புலவு வேற்கைப் புளிஞர்கோன் பொருவில் காதல்*
*அனையவற் கமைவிற் செய்தான் ஆரவற் கன்பி லாதார்*
*நினைவருங் குணங்கொ டன்றே இராமன்மேல் நிமிர்ந்த காதல்.* 26

---

போல, அளவு கடந்த உவகையினுல் மறுபடியும் வணங்கினுன். விம்மினன்—உடல் பூரிக்கப்பெற்ருன்; பயிர் உயர்ந்ததோடு பருக்கவுஞ் செய்தது. எதனுல் எனின்:—உவகை வீங்க—உவகை வெள்ளம் மேன்மேல் எழுதலால். இந்த நிலையில் பரதனை ஒரு முறை நோக்கினுன். அவனது தீட்டுதற்கரிய திருமேனி யழகில், இராமபிரானது கார் குலாம் நிறத்தில் ஈடுபட்டது போன்று ஈடுபட்டு. பூட்டிய கையன்—(பாதங்களைப்)பற்றிய கையை எடுக்க மனமில்லாதவனுனுன். இராமன்பால் வைத்த அன்பிற்கு மேற்பட்ட அன்பு பரதன்மீது நிமிர்ந்தது. அந்நிலையிற் கூறலுற்ருன்.

154. சிந்தனை முகத்துத் தேக்கி—கவலையை முகத்திலே நிறைத்து. போயினை—இராமனை அழைத்துப்போக வந்தாய். தன்மைகண்டால்—உனது இத்தன்மையைப் பார்த்தால். உனக்கு ஒப்பாவார்களோ? கேழ்—ஒப்பு.

155. ஏழை எயினனேன்—அறிவற்ற வேடனுகிய நான். புகழ்க்கற்றை—புகழப்படும் கிரணங்களின் தொகுதி. மன்—அரசர்கள். உரவு—வலிமை.

156. மாற்றம்—சொல். புலவு—புலால். பொருவு இல் காதல் அனையவற்கு அமைவில் செய்தான்—ஒப்பில்லாத காதலை அப்பரதன் மாட்டுத் தகுதியினுற் செய்தான். நினைவு அரும் குணம்—முன்பு 'செப்பருங் குணத்திராமன்' என்ருர்; (அயோத்தி: 42.) நினைக்கவும் அரிய குணங்களாலல்லவோ குகனுக்கு இராமன் மேல் காதல் வெள்ளம் படிப்படியாகப் பெருகி நிமிர்ந்தது; அது போன்ற அருங்குணம் படைத்த பரதன் மாட்டும் அங்ஙனமே காதல் கடல்புரைய நிமிர்ந்தது.

# 23. குகன் அன்னையரைக் காணுதல்.

பரதன் தம்பியுடனும் தாய்மாருடனும் குகன் நாவாய் செலுத்தக் கங்கையைக் கடந்த பொழுது, அவ்வேடர் தலைவன் அன்னையர் மூவரையுங்கண்டு வணங்கிய வரலாறு இங்கே கூறப்படுகின்றது.

இப்பகுதியிற் காணப்படும் செய்யுள்கள் ஓசையினாலும் பொருளமைதியினாலும் மிகச் சீரியன என்று பலராலும் போற்றப்படுவன. பரதன் குகனுக்கு அன்னையரை அறிமுகஞ் செய்வித்தலைக் கூறும் இப் பகுதியில் குகனது பக்திப் பெருக்கம், பரதனது துன்பஞ் செறிந்த நிலைமை, மெய்ந்நிறுவிய தயரதன் பெருமை, கோசலையின் தெய்வீக மாண்பு, சுமித்திரையின் நிறை அன்பு, கைகேசியின் இடரிலாக் கொடுமை—இவற்றையெல்லாம் சீரிய ஓசை நலம் செறிந்த ஒரு சில பாடல்களினால் கண் முன்னே நிறுத்தும் கவிநயம் பல முறை படித்து இன்புறற்பாலது. பல திறப்பட்ட பாவநிலைகளைப் பெரும்பாலும் ஒரு நெறிப்பட்ட ஓசை நலம் வாய்ந்த செய்யுளில் அமைத்துக் கூறுந் திறம் நுனித்துணரற்பாலது.

[தெ. ப:—குகப்படலம்: 65-70.]

**157** சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற
கோசலையைத் தொழுது நோக்கி
வெற்றித்தார்க் குரிசிலிவ ராரென்று
குகன்வினவ வேந்தர் வைகும்

157. தொழுது நோக்கி—கையினாற் சுட்டாது தேவர் முதலியோர் தொழுவதுபோலத் தொழுது கண்ணால் நோக்கி. இவர் ஆர் என்ன—இங்ஙனம் தேவரும் சுற்றமும் தொழநின்ற பெருமையையுடைய இவர் யாவரோ என்னும் குறிப்புத் தோன்றும்படி வினவ; பரதனும் அதை உணர்ந்து கூறுவான். கொற்றத் தார்க் குரிசில்—வெற்றிமாலை சூடிய குரிசிலே! வேந்தர்

முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகும்
ஈன்றானை முன்னீன் றானைப்
பெற்றத்தாற் பெருஞ்செல்வம் யான்பிறத்த
லாற்றுறந்த பெரியாள் என்றான். 1

158 என்றலுமே அடியின்மிசை நெடிதுவீழ்ந்
தழுவானை இவனா ரென்று
கன்றுபிரி காராவின் துயருடைய
கொடிவினவக் கழற்கால் மைந்தன்
இன்றுணைவன் இராகவனுக்கு இலக்குவற்கும்
இளையவற்கும் எனக்கும் மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பான்
இந்நின்ற குரிசில் என்றான். 2

---

வைகும் முற்றத்தான்—தயரதன்; அரசர் வணங்கும் பொருட்டுக் காலம் பார்த்துக் காத்திருக்கும் முற்றத்தான். மூவுலகும் ஈன்றான்—பிரமன். அவனை முன் ஈன்றான்—திருமால்; இங்கு இராமன். பெற்றத்தால்—பெற்றதால்; விரித்தல் விகாரம். பெரியாள்—பெருந்தகையாள்.

158. நெடிது வீழ்ந்து—குஞ்சி மண்ணுறப் பணிந்து. அழுவானை—இராமனைப் பிரிந்த துயரம் முகத்திலே தெரிய அது கண்டு ஆற்றாது அழுகின்ற குகனை. இவன் ஆர் என்று—இப்படி அழுகின்றவன் யாவன் என்று. கன்று பிரி காராவின் துயருடைய கொடி—'கன்று பிரிந்துழிக் கறவை யொப்பக் கலங்கிய' கோசலை. (அயோத்தி. 58.) இராமன் மீதுள்ள அன்பு, அவனைச் சேர்ந்த குகன் மாட்டும் படர்ந்தமையால் 'கொடி' என்றார்; அன்றித் தன் மெல்லியல்புக்கு விஞ்சிய பாரம் சுமக்கும் கொடிபோலப் பெரிய துன்பத்தை ஆற்றியிருந்தவளாதலால் 'கொடி' என்றார் எனலுமாம். கழல்கால் மைந்தன்—மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றிய கோசலையின் மனோபாவங் கருதி பரதனும் 'மைந்தன்' எனப்பட்டான். இன் துணைவன் இராகவனுக்கு, இலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான், குகன் என்பான் இந்நின்ற குரிசில். இதில் பரதன் தன்னை ஈற்றிலே வைத்துக் கூறியதும், 'குகன்' என்று பெயர் கூறி அறிமுகஞ் செய்ததும், அன்னையர் பெயர் குறியாமல் விட்டதும் அறியற்பாலன.